Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரெண்டு

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ்.மக்களின் நன்மை கருதி

EXPO AVIATION
LION AIR
SERENDIB EXPRESS

யாழ். - கொழும்பு - யாழ்.

மூன்று விமானங்களுக்கான ரிக்கெற்றுக்களையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள...

ஹெப்பி இம்பெக்ஸ்

புதிய உயர் கல்லூரி
95, பருத்தித்துறை வீதி (ஆரியகுளம் முன்பாக)
யாழ்ப்பாணம். 021 - 2226144
24 மணி நேர சேவைக்கு 077-6038505
(சி-1096)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 13 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.ஆகிர் 27 (28.06.2003) சனிக்கிழமை இதழ்: 269


திரண்ட சனசமுத்திரத்தில் ஒருபகுதி


விண்ணை முட்டிய எழுச்சிக்குரல்


தகர்க்கப்படுகிறது படைமுகாம் மாதிரி
(இன்னும் படங்கள் உள்ளே)

## ‘எமது நிலம் எமக்கு வேண்டும்’ – பிரவாகித்தது ‘பொங்கு தமிழ்’

# இரண்டு லட்சத்துக்கும் அதிகமானோர் உணர்வெழுச்சி பொங்கத் திரண்டனர்!

## சனசமுத்திரத்தில் மூழ்கியது மைதானம்

(யாழ்ப்பாணம்)

**‘எமது நிலம் எமக்கு வேண்டும்’ என ஒரேகுரலில் வலியுறுத்தி - இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் ஒன்றுதிரண்ட, மாபெரும் ‘பொங்கு தமிழ்’ எழுச்சி நிகழ்வு, வரலாறு கண்டிராத உணர்வு பொங்க, பல்கலைக் கழக மருத்துவபீட மைதானத்தில் நேற்று நடைபெற்றது.**

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும், அணியணியாகப் புறப்பட்ட மக்கள், யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இலட்சக்கணக்கில் ஒன்று திரண்டனர்.

முன்னதாக - பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தை அண்டிய - பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலிச் சந்தி, கலட்டிச் சந்தி, கொக்குவில் சந்தி ஆகிய இடங்களுக்கு வந்தடைந்த மக்கள், பின்னர் அங்கிருந்து யாழ்.பல்கலைக் கழக மருத்துவபீட மைதானத்தை நோக்கி அணிவகுத்துப் பேரணியாகச் சென்றனர்.

தமிழீழத் தேசியத் தலைவரின் உருவப்படங்களைத் தாங்கியும், பதாகைகளை ஏந்தியவாறும் - எழுச்சிக் கோஷங்களுடன், அலையலையாக- மக்கள் அணிவகுத்துச் சென்றனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் கண்காணிப்புக்குழுவின் அறிக்கை

சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கப்பல், கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கையினை, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு நேற்று வெளியிட்டது.

இந்த அறிக்கை - அரசாங்கத்தின் சமாதானச் செயலகத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்திற்கும் நேற்று மாலை அனுப்பி வைக்கப்பட்டதாக, கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை - இந்த விசாரணை அறிக்கை தொடர்பான ஊடகங்களுக்கான விபரம், இன்று - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரால் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (01)

## யுத்தமின்றியே ராணுவத்தினர் வெளியேறும்நிலை உருவாகும்!

### மாணவர் தலைவர் கஜேந்திரன் நம்பிக்கை



எங்களுடைய இனத்தின் விடுதலைக்காக தங்களுடைய உயிரை ஈந்து போராடிக்கொண்டிருக்கின்ற விடுதலைப் புலிகளும், எங்களுக்காக இந்த விடுதலைப் போராட்டத்தை வழிநடத்திக்கொண்டிருக்கின்ற தலைவர் பிரபாகரனதும் கனவு வெகு விரைவில் நனவாகும் என்ற நம்பிக்கை இப்போது எங்களிடம் வலுப்பெற்றுள்ளது.

இவ்வாறு- சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன் தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சரியான வரலாற்றுக் கட்டத்திலேயே தமிழினம் பொங்கி எழுந்திருக்கிறது!

### யாழ். அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி



(யாழ்ப்பாணம்)

“தற்போது வரலாற்றின் இன்னுமொரு சரியான கட்டத்தில், பல்கலைக்கழகச் சமூகத்தின் வழிகாட்டலில், தமிழ்ச் சமூகம் பொங்கிப் பிரவாகித்து, பெரும் சக்தியாக எழுச்சி கொண்டு நிற்கிறது” இவ்வாறு, நேற்றைய ‘பொங்கு தமிழ்’ எழுச்சி நிகழ்வின்போது- உரைநிகழ்த்திய தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியறதுறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

இந்த எழுச்சி நிகழ்வில் அவர் தொடர்ந்து உரைநிகழ்த்தும்போது- ‘அழிவுக்கடலில் அமிழ்த்திவிடும் ஒரு பொறியென்பதை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அதிகார பலம் பொருந்திய இடைக்கால அரசாங்கம் விடுதலைப் புலிகளிடம் கைய

## ‘பொங்கு தமிழ்’ பிரகடனத்தில் தமி

(யாழ்ப்பாணம்)

“எமது நிலம் எமக்கு வேண்டும், எங்கள் வீடுகளுக்கு நாங்கள் போக வேண்டும், உங்கள் வீடுகளுக்கு நீங்கள் போங்கள்” இவ்வாறு நேற்றைய ‘பொங்கு தமிழ்’ எழுச்சி நிகழ்வின்போது- வெளியிடப்பட்ட ‘பொங்கு தமிழ்’ பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அப்பிரகடனத்தின் முழுவிபரம் வருமாறு -

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி பதினாறு மாதங்களுக்கு மேலாகிவிட்டது. காலம் கடந்து போய் உள்ளது. நமது
வாழ்வு இழுத்தடிக்கப்பட்டு,
வார்த்தை இடைநின்றுபோய
ளது. யுத்த மேகம் எம்மில்
கப்பட்டிருக்கின்றது. இந்நிலை
நாங்கள் மாற்ற விரும்புகி
இந்த நோக்கத்தோடு, குடா

# யாழ். இந்துக் கல்லூரியிலும் ‘பொங்கு தமிழ்’ எழுச்சி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரியின் மாண வர் சமூகத்தினால், ‘பொங்கு தமிழ்’ எழுச்சி நிகழ்வு நேற்று உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். இந்துக்கல்லூரி குமாரசு வாமி மண்டபத்தில், நேற்றுக் காலை 10 மணியளவில் கல்லூரி உயர்தர மாணவன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், கல்லூரி பிரதி அதிபர் ஓங்காரமூர்த்தி, தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் ராணிமைந்தன், தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவரும் யாழ்.இந்துக் கல்லூரி மாணவனுமான நிலக்ஷன் ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

தமிழ் மாணவர் ஒன்றியத் தலை வர் நிலக்ஷனின் தலைமையுரை யையடுத்து, கல்லூரி பிரதி அதிபர் ஓங்காரமூர்த்தி, ‘பொங்கு தமிழ்’ வாழ்த்துரை நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து - இந்துக் கல்லூரி ஆசிரியர் சிவராசா, தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ராணிமைந்தன், பல்கலைக்கழக மாண வர் பிரதிநிதி ஆகியோர் ‘பொங்கு தமிழ்’ எழுச்சி உரைகளை நிகழ்த் தினர்.

‘பொங்கு தமிழ்’ நிகழ்வினை ஒட்டி, யாழ்.இந்துக்கல்லூரி வாயிலில் விசேட அலங்காரவளைவுகள் அமைக கப்பட்டு, கல்லூரி வளாகம் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக் கப்பட்டிருந்தது. (லி)




‘பொங்கு தமிழ்’ நிகழ்வுக்காக இந்துக் கல்லூரி வாயில் அலங்க ரிக்கப்பட்டிருப்பதையும், கல்லூரி உப அதிபர் ஓங்காரமூர்த்தி மங்கள விளக்கேற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## அகில இலங்கை சைவப்புலவர் தேர்வு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் சைவப்புலவர் தேர்வு அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளது. இதற் கான விண்ணப்ப முடிவுதிகதி அடுத்த மாதம் 31 ஆம் திகதியா கும்.

‘125, அரசடிவீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்’ என்ற முகவரியில், விண்ணப்பப்படிவம் மற்றும் பாட விதானம் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அகில இலங்கை சைவப்புலவர் சங்க தேர் வுச்செயலாளர் வ.கந்தசாமி அறி வித்துள்ளார்.

## பிரதேச செயலர்கள் இடமாற்றம்

(மட்டுவில்)

கோப்பாய் பிரதேச செயலராகக் கடமையாற்றிய செ.ஸ்ரீனிவாசன் - தென்மராட்சி பிரதேச செயலராக வும், தென்மராட்சி பிரதேச செயல ராகக் கடமையாற்றிய க.கேதீஸ் வரன் - கோப்பாய் பிரதேச செயல ராகவும் இடமாற்றம் செய்யப்பட் டுள்ளனர்.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், இருவரும் பரஸ் பரம் இடமாற்றப்பட்டுள்ளனர்.

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் ‘கியூடெக்’ நிறுவனம் கடன்வசதி!

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேற்றம் நடைபெற்ற மூன்று கிராம அலு வலர் பிரிவுகளில் - ‘கியூடெக்’ நிறு வனத்தினர் சுழற்சிமுறையில், கடன் களையும், கடற்தொழில் உபகர ணங்களையும் வழங்கவுள்ளனர்.

அண்மையில், ‘கியூடெக்’ நிறு வன அதிகாரிகள் இந்தப் பிரதே சத்திற்கு வருகைதந்து, வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் சங்க சமா சத்தில் கலந்துரையாடலை நடாத்தி, இது தொடர்பான முடிவுகளை எடுத்தனர்.

இதன்படி - வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, உடுத்துறை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில், மிக வும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, தலா 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா வீதம், கடற்தொழில் கூட்டுறவுச் சங்கம் மூலம் சுழற்சிமுறைக் கடன் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் - முதற்கட்டமாக, ஒவ வொரு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் தலா இரண்டு கட்டு மரங்களை வழங்குவதற்கும், ‘கியூ டெக்’ முன்வந்திருப்பது குறிப்பிடத் தக்கது. (122)

# வட-கிழக்குப் பகுதிகளுக்குரிய ஓவியப் பாடவிதானம் தேவை!

## கண்காட்சியில் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர்

வடக்கு - கிழக்கு மாகாண பாட சாலை மாணவர்களுக்கான ஓவி யக்கலைப் பாடவிதானம், தமிழ்ப் பண்பாட்டுக்கேற்ற வகையில் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என, மாகா ணக் கல்விஅமைச்சின் செயலாளர் இரா.தியாகலிங்கம் தெரிவித்தார்.

திருகோணமலை சென்.ஜோசப் கல்லூரியில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சியில் கலந்துகொண்ட அவர் - அங்கு மேலும் பேசுகையில்,

வடக்கு - கிழக்கு மாகாண ஓவி யக்கலைப் பாடவிதானம் தமிழ்ப்பண் பாட்டுக்கேற்ற பாடவிதானமாக அமை யவில்லை. ஆகவே, வடக்கு-கிழக்கு மாகாணத்திற்குரிய பாரம்பரிய ஓவிய மரபு ஒன்றை உருவாக்க வேண்டும்.

சிங்கள ஓவியத்திற்கான பாரம் பரிய மரபு ஒன்றுள்ளது. ஆனால், தமிழ் ஓவியத்திற்கெனப் பாரம்பரிய மரபு ஒன்று இல்லாதது வேத னைக்குரியது.

மேலும், தற்போது பாடசாலை யில் அமுலிலுள்ள ஓவியப் பாடவி தானம், தமிழ் கலாசாரத்திற்கான பாடவிதானமாக அமையவில்லை என்றும் குறிப்பிட்டார்.




சாவகச்சேரி

அருள்மிகு

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

மஹா கும்பாபிஷேக விழா

அம்பிகை அடியார்களே!

| | |
|---|---|
| கிரியாரம்பம் | :- 30.06.2003 திங்கள் அதிகாலை. |
| பக்தர்கள் எண்ணெய்க் காப்பு | :- 01.07.2003 செவ்வாய். |
| மஹா கும்பாபிஷேகம் | :- 02.07.2003 புதன் மு.ப. 09.27 முதல் 10.27 வரை. |

மண்டலாபிஷேக உபயம் விரும்புவோர் முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும்.

19.07.2003 சனிக்கிழமை மஹோற்சவம் ஆரம்பம் (கொடியேற்றம்) 10 நாள் நடைபெறும்.

01.08.2003 வெள்ளிக்கிழமை ஆடிப் பூரம் அன்று பி.ப 2.30 மணிக்கு திருவிளக்குப் பூஜை நடைபெறும். முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!

இங்ஙனம்

ப.மகா கணபதி சர்மா

(ஆதீன தர்மகர்த்தா)

(396)

யாழ்ப்பாணம் நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலய

வசந்தோற்சவ அறிவித்தல்

(செங்கள நீர் தொட்டித் திருவிழா)

மேற்படி ஆலயத்தில் நாளை (28.06.2003) சனிக்கிழமை மாலை தொட்டித் திருவிழா இடம்பெறும்.

- மாலை 5.30 மணிக்கு - வசந்த மண்டபப் பூசை.
- மாலை 6.15 மணிக்கு - தொட்டியில் அலங்கரிக்கப்பட்ட அன்னச் சோடனையில் ஆனந்த சயனத்தில் அம்பாள் எழுந்தருளல்.
- மாலை 6.45 மணிக்கு - ஊஞ்சற் பாட்டு.
- மாலை 7.15 மணிக்கு -
  - நல்லூர் உதயசங்கர் குழுவினர்.
  - N.R.சின்னராசாவின் மைந்தர்களும் இந்தியக் கலைஞர்களும்.
  - N.R.கோவிந்தசாமியின் மைந்தர்களும், இந்தியக் கலைஞர்களும் ஒரே மேடையில் இணைந்து வழங்கும் மேளக் கச்சேரி.
- மாலை 8.15 மணிக்கு - அம்பாள் தொட்டியிலிருந்து இறங்குதல்.
- மாலை 8.30 மணிக்கு - யாழ். பல்கலைக்கழக மாணவன் தமிழ்வேந்தனின் ‘மகாபாரத’த் தொடர் சொற்பொழிவு.
- மாலை 9.00 மணிக்கு - விசேட நிகழ்ச்சியாக அருணாவின் பின்னணி வாத்தியக் கலைஞர்களுடன் யாழ். பல்கலைக்கழக இசை வரிவுரையாளர் S.தர்ஷனின் குரலிசை கானங்களும் தொடர்ந்து அருணாவின் இன்னிசை கானங்களும் இடம்பெறும்.

10 ஆம் திருவிழா உபயகாரர்

S.R.T.சண்முகநாதன்

(சி-1126)

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

நான்காவது அகவையில்

பெயர் : தூரியான்

முகவரி: 669, நாவலர் வீதி, நல்லூர்.



ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு சரத்குமார், மீனா, ரம்யா கிருஷ்ணன் நடித்த கே.எஸ்.ரவிக்குமாரின்

பாறை



10.30, 2.30, 6.30, 9.30 (சி-973)

நிறைஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார் (இரு வேடம்), தேவயானி நடிப்பில்

சூரிய வம்சம்

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே) தினசரி இரவு. 8.45 (பு.நே)

RED DRAGON (சி-974)

The Royal College of Jaffna

Spoken English With Grammar

N.Vigneswaran Archery

Black Road, Chankanai

426, (302), K.K.S Road, Jaffna. (சி/1059)

...டு விற்பனைக்கு

...தித்துறை வீதியில், கோப்பாய் ...ச செயலகத்துக்கு முன்பாக ...ரப்புக் காணியுடன் சகல வசதி ...ன் கூடிய வீடு விற்பனைக் அல்லது வாடகைக்குண்டு.

...்பு:- தயா ரீச்சர், கோப்பாய் வடக்கு.

... - 0777 110507 (397)

# போர் பற்றிய சந்திரிகாவின் மிரட்டலால் கொழும்பு பங்குச் சந்தையில் பாதிப்பு!

## ஏ.எவ்.பி. செய்தியாளர் அமால் ஜெயசிங்க கருத்து

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மீண்டும் போருக்குத் தயாராகி வருகின்றனர். நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படப் போகின்றது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்து வரும் கருத்துக்களால், கொழும்புப் பங்குசந்தை வீழ்ச்சியடைந்து வருவதாக, ஏ.எவ்.பியின் கொழும்புக்கான செய்தியாளர் அமால் ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, யுத்தம் பற்றித் தொடர்ச்சியாகத் தெரிவித்துவரும் கருத்துக்கள், கொழும்புப் பங்குச்சந்தையின் வர்த்தக நடவடிக்கைகளைப் பெரிதும் பாதித்துள்ளது. இந்தப் பாதிப்பு, தற்போது உச்சநிலையை அடைந்திருக்கின்றது.

அத்துடன் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நிலவுகின்ற இணக்கப்பாடின்மையும், கொழும்புப் பங்குச்சந்தையின் வர்த்தக நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது என்று அமால் ஜெயசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# லெப்ரினன்ட் வீட்டிலிருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டன!

(கொழும்பு)

இராணுவ வாத்தியக் குழுவைச் சேர்ந்த சிப்பாய் ஒருவரின் கொலை தொடர்பாக, விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் - இராணுவ லெப்டினன்ட் ஒருவரையும், வேறு மூன்று பேரையும் கைதுசெய்துள்ளதுடன், ஆயுதங்களையும் மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்த மேலும் தெரியவருவதாவது -

மாதுறுஓயா இராணுவப்பயிற்சி முகாமின், வாத்தியக் குழுவைச் சேர்ந்த கெமுனு ரத்னாயக்க என்பவர், அண்மையில் கொலை செய்யப்பட்டார். இவரது மரணம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், தம்புத்தேகம என்ற இடத்தில் லெப்டினன்ட் தர அதிகாரி ஒருவரின் வீட்டில் சோதனை நடத்தினர்.

இதன்போது, அவரது வீட்டின் பின்புறத்தில் - வாழைத் தோட்டத்தில் மறைத்துவைக்கப்பட்டிருந்த ரி-56 ரக துப்பாக்கி, இரண்டு மகஸீன்கள், 220 ரவைகள் மற்றும் கிரனேட்டுகள் நான்கு, 9 மி.மீ. ரவைகள் 91, வாயு முகமூடி மற்றும் உயர்வலுத் தொலைத்தொடர்பு சாதனம் என்பனவற்றைக் கைப்பற்றினர்.

இதையடுத்து, இராணுவ லெப்டினன்ட் தர அதிகாரியும் வேறு மூவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். லெப்டினன்ட் தர அதிகாரியின் சகோதரர், மேற்படி கொலை தொடர்பில் முக்கிய சந்தேக நபராகத் தேடப்பட்டுவருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# பாதுகாப்பு நிலைவரம் குறித்து அறிக்கை தயாரிக்கப் பணிப்பு!

## லண்டனிலிருந்து பிரதமர் ரணில் உத்தரவு



தெஹிவளை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி, சுனில் தாப்ரு கொலை உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் தொடர்பாக- பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பிரிட்டனில் இருந்து உள்துறை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருடன் தொடர்புகொண்டு விபரங்களைக கேட்டறிந்தார்.

தான் நாடு திரும்பியதும், இந்தச் சம்பவங்கள் குறித்துப் பூரண அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்க- இரு அமைச்சர்களையும் பிரதமர் கேட்டுள்ளார். இதன்படி, நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாக எடுக்கப் பட வேண்டிய தீர்மானங்களை - பிரதமர் நாடு திரும்பியதும் மேற்கொள்வார் என்று உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.





திருமலை - சண்முகா இந்துமகளிர் கல்லூரியில் கணினிப் பயிற்சி மையத் திறப்புவிழாவில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா.சம்பந்தன், துரைரட்ணசிங்கம் ஆகியோர் அழைத்துவரப்படுவதையும், கணினி மையத்தில் பயிற்சிபெறும் மாணவிகளையும் படங்களில் காணலாம்.

## விடுதலைப் புலிகளின்

# கொள்கலனை விடுவிக்க சுங்க அதிகாரிகள் முடிவு

சுவிற்சர்லாந்திலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட புலிகளின் பிரசாரப் பொருட்கள், வெளியீடுகள் அடங்கிய கொள்கலனை விடுவிப்பதற்கு, சுங்கத் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

அலுவலகப் பொருட்கள் என்ற ரீதியிலேயே அந்தப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. இதனால், சுங்க அதிகாரிகள் இந்தக் கொல்கலனை விடுவிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். இதற்கு சட்டமா அதிபர் அனுமதி வழங்கியுள்ளார்.

இந்தக் கொள்கலனில் - புலிகளின வெளியீடுகள், ஸ்ரிக்கர்க்கள் போன்ற பொருட்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.. இரண்டு மாதங்களாக, எவரும் உரிமை கோராத நிலையில் இந்தக் கொள்கலன்கள் விமான நிலையத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் முதலாவது கணினி மையம் சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் திறப்பு!

திருகோணமலை மாவட்டத்தில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடனான முதலாவது கணினிப் பயிற்சி மையம் - சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் திறந்துவைக்கப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் நாடு முழுவதிலுமுள்ள, தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் கணினிப்பயிற்சி மையங்களை கல்வி அமைச்சு அமைத்து வருகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில்- சண்முகா மகளிர் கல்லூரி, மூதூர் மத்திய மகாவித்தியாலயம், கந்தளாய் அக்ரபோதி மகாவித்தியாலயம், ராஜ்ஜிய வித்தியாலோக மகா வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளும், கணினிப்பயிற்சி மையங்களைத் திறப்பதற்குத் தெரிவு செய்யப்பட்டன.

இத்திட்டத்துக்கமைவாக, திருமலை மாவட்டத்தின் முதலாவது கணினிப்பயிற்சி மையம், சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் திறந்து வைக்கப்பட்டது. 20 கணினிகளைக் கொண்ட இப் பயிற்சி மையத்தை, திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் திறந்து வைத்தார்.

இந்தத் திறப்புவிழா நிகழ்வில்- திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம், மாகாணக் கல்விப் பணிப்பாளர் மகாலிங்கம் உட்பட கல்வி அமைச்சு அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக விசேட விவாதம் நடத்தக் கோரிக்கை

## எதிர்க்கட்சிகள் விடுத்தன

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்புநிலை தொடர்பாக - நாடாளுமன்றத்தில் விசேட விவாதம் ஒன்றை நடத்த, சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவிடம் எதிர்க்கட்சித் தலைவர்கள் கோரியுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில், கடந்த புதனன்று நடந்த கூட்டத்திலேயே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் - எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பி. சார்பில் - விமல் வீரவன்ச, மக்கள் ஐக்கிய முன்னணி சார்பில்- தினேஷ் குணவர்த்தன, தேசிய ஐக்கிய முன்னணி சார்பில்- சேகு இஸ்ஸதீன், கம்யூனிஸ்ட் கட்சி சார்பில்- ராஜா கொளுரே ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரசியல்வாதிகள், இராணுவ, பொலிஸ் புலனாய்வுத்துறை அதிகாரிகள் தொடர்ச்சியாகக் கொலை செய்யப்பட்டு வருகின்றனர். இந்தக் கொலைகள். பற்றி விவாதிக்கவே விசேட விவாதம் நடத்தப்படவேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# போலி பிளாஸ்ரர்கள் கொழும்பில் உற்பத்தி!

(கொழும்பு)

உலகப்புகழ் பெற்ற 'பிளாஸ்ரர்' நிறுவனமொன்றின் பெயரில் - போலியான பிளாஸ்ரர் கொழும்பில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு விடப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

தாய்லாந்து நாட்டில் உற்பத்தியாகும் இந்த உலகப்புகழ் பெற்ற பிளாஸ்ரரின் பெயரிலேயே, போலியான பிளாஸ்ரர் தாயாரிக்கப்பட்டு விற்பனைக்கு விடப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் போலிப் பிளாஸ்ரர்கள், கொழும்பு நகரப்பகுதியிலேயே உற்பத்தி செய்யப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. 1.3 மில்லியன் ரூபா பெறுமதியான பிளாஸ்ரர்கள் விற்பனைக்கு விடப்பட்டிருக்கலாம் என்றும், இதுதொடர்பான விசாரணைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சுகாதார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

# விவசாயம் மேற்கொள்வதற்கு புலிகள்~முஸ்லிம்கள் இணக்கம்

(அம்பாறை)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையில் அக்கரைப்பற்றுப் பிரதேச செயலக கலாசார மண்டபத்தில், நடைபெற்ற வலயமட்டக் கூட்டத்தில் -

பொத்துவில் செம்மணிக்குளம், செல்வவெளி, றொட்டை ஆகிய பகுதிகளில் - இரண்டாயிரத்து 500 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் செய்ய அனுமதிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் - புலிகள் தரப்பில் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவாவும், முஸ்லிம்கள் சார்பில்- ஐ.எம்.இப்ராகிம் தலைமையிலான குழுவினரும் கலந்து கொண்டனர். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சார்பில் - பில் நிஸ்ரோ குஜலா இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

### நாளை மூன்று பிரெஞ்சுத் திரைப்படங்கள்

யாழ் பல்கலைக்கழக நுண்கலைத் துறையும், கொழும்பு பிரெஞ்சு நட்புறவுக் கழகமும் இணைந்து, கைலாசபதி கலையரங்கில் நடத்தும் பிரெஞ்சுத் திரைப்படவிழாவில், நாளை காலை 10 மணிக்கு - 'தன்னைக் கதாநாயகன் ஆக்கிக்கொண்டவன்' என்ற திரைப்படமும், பி.ப. 3.30 மணிக்கு 'அவர்கள் நேற்றுப் பிறக்கவில்லை' என்ற திரைப்படமும், பி.ப. 5.30 மணிக்கு 'கூனன்' என்ற திரைப்படமும் காண்பிக்கப்படவுள்ளன.

## பொலிஸார் பதிவு கோரினால் முறையிடலாம்

(கொழும்பு)

பாதுகாப்பைக் காரணம் காட்டி, பொலிஸ் பதிவுகளைக் கோரும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென, உள்துறை அமைச்சின் செயலாளா எம்.என்.ஜுனைட் தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலும், வன்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும் பொலிஸாரும், இராணுவத்தினரும் ஒன்றிணைந்து நாடுமுழுவதும் தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். எனினும், இதனைக் காரணமாக வைத்து - பொலிஸ் உத்தியோகத்தர்கள், மக்களிடம் பொலிஸ் பதிவு கோரினால், அது குறித்து தங்களுக்கு உடனடியாக அறிவிக்குமாறும் -

பொலிஸ் பதிவு கோருவதற்கான எந்தவொரு உத்தரவினையும் உள்துறை அமைச்சு பிறப்பிக்கவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

# சந்தேகநபர்கள் மீதான வழக்குகள் வாபஸ்!

## ஐவரை விடுவித்தது நீதிமன்றம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடம் பயிற்சி பெற்றதாகவும், தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை வைத்திருந்தாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு- பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ், தடுத்துவைக்கப்பட்டிருந்த ஐந்து தமிழ் இளைஞர்கள், திருகோணமலை மாவட்ட மேல்நீதிமன்றால் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

திருகோணமலை - மட்டக்களப்பு மேல்நீதிமன்ற நீதிபதி சுப்பிரமணியம் பரமராஜாவினால் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேள்ள, அரசதரப்பு சட்டத்தரணி, சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் சந்தேகநபர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை மீளப்பெறுவதாகத் தெரிவித்தார்.

இதனையடுத்தே, நீதிவான் இவர்களை விடுதலை செய்யுமாறு தீர்ப்பு வழங்கினார்.

### மிதிவெடி அகற்றும் ஊழியர் காயமுற்றார்

தலைமன்னாரில், கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த எவ். எஸ்.டி. கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியரான எஸ்.மகேந்திரம் (வயது 27) என்பவர்- தவறுதலாக வெடிபொருள் வெடித்ததால் காயமடைந்தார்.

தலைமன்னார் பாலத்திற்கு அருகில் இச்சம்பவம் இடம்பெற்றது.(201)

# 'ரொங்கோ' கண்ணி அகற்றும் குழு 183 மிதிவெடிகளை அகற்றியது!

அமெரிக்க 'ரொங்கோ' மிதிவெடி அகற்றும் குழு, சரசாலைப் பகுதியிலுள்ள 31 ஆயிரத்து 328 சதுரஅடிப் பரப்பளவான பிரதேசத்திலுள்ள மிதிவெடிகளை அகற்றியுள்ளது.

கடந்த மூன்று மாதங்களில் - இக்குழுவினர் - 183 மிதிவெடிகளையும், ஏவப்பட்டு வெடிக்காத 87 ஷெல்களையும், இரண்டு அமுக்க வெடிகளையும் அகற்றிச் செயலிழக்க வைத்தனர்.

மோப்ப நாய்களின் உதவியுடன் மிதிவெடிகளை அகற்றிவரும் இக்குழுவினர் - உடனடி மனிதாபிமானத் தேவைகளுள்ள பகுதியாக இனங்காணப்பட்ட இடங்களுக்குச் சென்று, தமது பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல்கள் நிகழ்ந்த - சரசாலை, மட்டுவில் பிரதேசங்களில், தற்போது மிதிவெடிகளை அகற்றும் பணிகளை இவர்கள் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த ஏப்ரலில் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த இக்குழுவினர்- எதிர்வரும் ஓகஸ்ட் மாதம்வரை இங்கு தங்கியிருப்பர் எனத் தெரியவருகின்றது. (ரா)

# சமாதானத் தீர்வை வலியுறுத்தி வவுனியாவில் அமைதிப் பேரணி

நிலையான சமாதானம் மற்றும் இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு ஆகியவற்றை வலியுறுத்தி, மூவின மக்கள் கலந்துகொள்ளும் அமைதிப் பேரணி ஒன்று வவுனியாவில் நடைபெறவுள்ளது.

மக்கள் சமாதான அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த அமைதிப் பேரணி, அடுத்த மாதம் முதலாம் திகதி காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வவுனியா - குடியிருப்பு பிள்ளையார் கோவிலடி, குருமன்காடு காளி கோவிலடி, கண்டிவீதி பௌத்த விகாரை, நகரப் பள்ளிவாசல், இறம்பைக்குளம் அந்தோனியார் கோயில் ஆகிய இடங்களிலிருந்து, மூவின மக்களும் ஊர்வலமாக - வவுனியா அரச செயலகத்தைச் சென்றடைவர். அங்கு பொதுக்கூட்டமும் நடைபெறும்.



சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்களுக்கு, 'சரகமல விதஸாரங்கா' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுவதைப் படத்தில் காணலாம். (46)

# மாமுனை ~ கட்டைக்காடு கடற்கரைவீதி திருத்தப்பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதா?

## நான்கு மாதங்களாகியும் பணிகள் ஆரம்பமாகவில்லை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிலுள்ள, மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரையிலான கடற்கரை வீதியைச் செப்பனிடுவதற்கு, உலக உணவுத் திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுவந்தது. ஆனால், திடீரென இந்த நடவடிக்கை கைவிடப்பட்டுவிட்டதா என, மீளக்குடியமர்ந்த மக்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரையான 18.2 கிலோமீற்றர் நீளமான வீதியை, சிரமதானம்மூலம் செப்பனிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது.

மருதங்கேணி பிரதேச செயலர் வி.ப.வேலாயுதபிள்ளை தலைமையில், வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத்தில், இதற்கான பயிற்சிப் பட்டறை கடந்த பெப்ரவரி 19 ஆம் திகதி நடைபெற்றது.

இப்பயிற்சிப்பட்டறையில், உலக உணவுத்திட்ட அதிகாரிகள், 'நிகொட்' நிறுவன அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், கிராம அலுவலர்கள், கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அதனைத் தொடர்ந்து- ஒவ்வொரு கிராமங்களிலுமுள்ள கடற்தொழிலாளர் சங்க அங்கத்தவர்களிடையே பயிற்சிப்பட்டறை நடைபெற்றது.

ஆனால், நான்கு மாதங்களாகியும் வீதி புனரமைப்பு வேலைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால், இத்திட்டம் கைவிடப்பட்டுவிட்டதா என்று மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது.

உலக உணவு ஸ்தாபனம், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் உதவியுடன், இவ்வீதி புனரமைக்கப்படவிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆலய மகோற்சவம்

துன்னாலை தெற்கு - ஸ்ரீ பூதேஸ்வரர் சிவன்கோயில் வருடாந்த மகோற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும் இம்மகோற்சவத்தில்- எதிர்வரும் 5 ஆம் திகதி இரதோற்சவமும், 6 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

# ஆங்கிலத்தை கற்பித்தல் மொழியாக்குவதில் அரசு பிரச்சினைகளை எதிர்கொள்கிறது!

## கல்வி அமைச்சர் கருணாசேன கொடிதுவக்கு

(கொழும்பு)

ஆங்கிலமொழி மூலமான கல்வியை அரசாங்கம் அறிமுகப்படுத்தினாலும், இதை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு பிரச்சினைகள் இருப்பதாக கல்வியமைச்சர் கருணாசேன கொடிதுவக்கு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர்மேலும் தெரிவித்ததாவது - ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், 300 பாடசாலைகளில் ஆங்கில மொழிமூலமான கல்வியை அறிமுகப்படுத்தியது.

இதன்படி- க.பொ.த. சாதாரணதர வகுப்பில் மூன்று பாடங்கள் ஆங்கிலத்தில் கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த ஆங்கிலமூல கற்பித்தலுக்கு நல்ல வரவேற்பிருந்தாலும், போதிய ஒத்துழைப்புக்கள் கிடைக்கவில்லை.

ஆங்கிலமொழிமூலக் கற்பித்தலில் இருக்கும் பலவீன நிலையை நீக்குவதற்கு வெளிநாட்டு நிறுவனங்கள் ஒத்துழைக்க வேண்டும். ஆனால், இதற்கான வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டபோதும், போதிய ஆதரவு கிடைக்கவில்லை.

ஆங்கிலம் பேசுவோர் அதிகமுள்ள நாடாக இலங்கையை மாற்றுவதற்கு அரசாங்கம் கூடுதல் முயற்சிகளை எடுத்துச் செயற்படும்.

அத்துடன், தகவல் தொழில்நுட்பத்தையும் பாடசாலை மட்டத்தில் முக்கியத்துவப்படுத்திக் கற்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஆங்கிலமும், தகவல் தொழில்நுட்பமும்தான், இன்றைய நவீன உலகிற்கு அவசியமானவை.

இந்தியாவில் எழுத்தறிவு வீதம் குறைவாக உள்ளபோதிலும், அந்நாடு உலகத் தொழிற்சந்தைக்கு பெரும் பங்களிப்பை வழங்கி வருகின்றது.

இலங்கையில் எழுத்தறிவு வீதம் உயர்வாக இருக்கின்றபோதிலும், அதனைப் பயனுடையதாக்கியிருக்கிறோமா என்பது கேள்விக்குரியதே.

இதனால் - ஆங்கிலத்திலும், தகவல் தொழில்நுட்பத்திலும் மாணவர்களைத் துரிதமாக வளர்ச்சியடைய வைப்பதற்கு தேசிய கல்வி நிறுவகம் புதிய திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தி வருகிறது என்று, கல்வி அமைச்சர் கருணாசேன கொடிதுவக்கு மேலும் தெரிவித்தார்.

# அரியாலை, நாவற்குழிப் பகுதிகளில் விரைவில் மிதிவெடி அகற்றும் பணி!

(யாழ்ப்பாணம்)

அரியாலை, நாவற்குழிப் பகுதிகளில் - மக்கள் மீளக்குடியமர இராணுவத்தரப்பு அனுமதித்த பிரதேசங்களில், விரைவில் மிதிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பமாகவுள்ளன.

இப்பிரதேசத்தில், இராணுவத்தினர் ஏற்கனவே நிலைகொண்டிருந்தமையால், மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இதனால், இப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர முடியாதநிலை தோன்றியுள்ளதையடுத்தே, மிதிவெடிகளை அகற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

# மடுமாதா உற்சவம் ஜூலை 2 ஆம் திகதி

மடுமாதா திருத்தலத்தின் திருவிழா - எதிர்வரும் இரண்டாம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

இதனை முன்னிட்டுக் கடந்த 22 ஆம் திகதி மாலை மன்னார் ஆயர் கலாநிதி பேரருட்திரு இராயப்பு யோசப் தலைமையில் கொடியேற்றப்பட்டு, தற்போது நவநாள் ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன.

தினமும் காலை ஆறு மணிக்குத் தமிழ்மொழியிலும், ஏழு மணிக்குச் சிங்கள மொழியிலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுவதுடன், மாலை 6.25 மணிமுதல் நவநாள் ஆராதனைகள் நடத்தப்படுகின்றன.

அடுத்தமாதம் முதலாம் திகதி மாலை வெஸ்பர்ஸ் ஆராதனை நடத்தப்படுவதுடன், இரண்டாம் திகதி திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு - மடுமாதாவின் திருச்சொரூபப் பவனியும், ஆசீர்வாதமும் இடம் பெறவுள்ளன.

# அரியாலை மாம்பழம் சந்தியில் மீண்டும் இராணுவ முகாம்!

(அரியாலை)

அரியாலை - மாம்பழம் சந்தியில் கடந்த புதன்கிழமை பிற்பகல் தொடக்கம் இராணுவத்தினர் முகாம் அமைத்து நிலைகொண்டுள்ளனர்.

கடந்த ஆண்டு நடுப்பகுதியில் அகற்றப்பட்ட மேற்படி முகாம், மீண்டும் அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதால் - அதனை அண்டியுள்ள மக்கள் பதற்றநிலையில் காணப்படுகின்றனர். (55)

# பாடசாலை பாடத்திட்டத்தில் ஆயுர்வேத வாழ்க்கைத் தத்துவம்

## கல்வி அமைச்சு நடவடிக்கை

(ஆழியவளை)

பாடசாலை மாணவர்கள் மத்தியில், ஆயுர்வேத அறிவைப் புகட்டும் வகையில் - தரம் 7 தொடக்கம் தரம் 11 வரை சமூகக்கல்விப் பாடத்துடன், ஆயுர்வேத வாழ்க்கைத் தத்துவத்தையும் மேலதிகமாகச் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காகத் தேசிய கல்வி நிறுவகமும், ஆயுர்வேதத் திணைக்களமும் இணைந்து, "சமூகக்கல்வியும் வரலாறும், ஆயுர்வேத வாழ்க்கைத் தத்துவமும்" என்னும் மேலதிக ஆசிரியர் கைநூலை வெளியிட்டுள்ளன.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் வைத்து, உள்நாட்டு மருத்துவ தேசிய நிறுவகப் பணிப்பாளர் சிசில் பள்ளகெதறவினால் கையளிக்கப்பட்ட மேற்படி நூல்களை - கிளிநொச்சி, முல்லை, துணுக்காய் வலயப் பாடசாலைகளில் சமூகக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பெற்றுக்கொண்டனர். (122)

### குடத்தனை அலுவலகத்தில் சிரமதானம்

(வடமராட்சி கிழக்கு)

பருத்தித்துறை பிரதேசசபையின் குடத்தனை உப அலுவலகத்தில், உள்ளூராட்சி வாரத்தையொட்டி, பிரதேசசபை செயலாளர் ஏ.நடராசா தலைமையில் மரம் நாட்டுவிழா மற்றும் சிரமதானம் என்பன இடம்பெற்றன. இதில் - ஊழியர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டனர். (17)

# சின்னஞ்சிறு செய்திகள்

### இரவல் கொடுக்கும் பகுதி புதன் தவிர்ந்த நாட்களில் இயங்கும்

(வடமராட்சி கிழக்கு)

கரவெட்டி பிரதேசசபையின் நெல்லியடி பொதுசன நூலகத்தின் மேல்மாடியில் இயங்கும் இரவல் கொடுக்கும் பகுதி, வாரத்தில் புதன் கிழமை தவிர ஏனைய நாட்களில் முற்பகல் 10.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை இயங்குமென கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.பசுபதி அறிவித்துள்ளார். (17)

### இலவசக் கணினிப்பயிற்சி

முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடாத்தப்படும் இலவசக் கணினிக் கற்கைநெறி - இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருகின்றது.

இங்கு, 40 மாணவர்கள் கணினிப் பயிற்சி பெற்று வருகின்றனர். (41)

### சான்றிதழ்களை பெறுமாறு அறிவிப்பு

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்று முடிந்த- தமிழ்மொழித் தினப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் - கடந்த 21 ஆம் திகதி வழங்கப்பட்டன. இச்சான்றிதழ்களை இதுவரை பெற்றுக்கொள்ளாதோர், வலயக் கல்விப்பணிமனையின் தமிழ்ப்பிரிவில் பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ரா)

### நெல்லியடியில் மீன்சந்தை திறப்பு

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபையினரால் சுமார் 35 லட்சம் ரூபா செலவில், நெல்லியடியில் நிர்மாணிக்கப்பட்ட புதிய மீன்சந்தை நாளைமறுநாள் திறக்கப்படவுள்ளது.

பிரதேசசபை செயலாளர் எஸ். பசுபதி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஷ்ணசாமி சந்தையைத் திறந்து வைப்பார். (17)

### கிளிநொச்சி மாணவனுக்கு வெள்ளிப் பதக்கம்

இந்து கலாசார அமைச்சினால் 2003 உலக இந்து மாநாட்டையொட்டி நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில், கிளிநொச்சி இந்துக்கல்லூரி மாணவன் தேசிய ரீதியில் வெள்ளிப் பதக்கம் பெற்றுள்ளார்.

கட்டுரைப்போட்டியில் மத்திய பிரிவில் தோற்றிய ச.சுஜிந்தன் என்னும் மாணவனே, தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தினைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றுள்ளார்.(122)

### நூலகக் கண்காட்சி

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி. வடக்கு பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட அளவெட்டி, தெல்லிப்பளை, காங்கேசன்துறை, மயிலிட்டி ஆகிய பொது நூலகங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து நடத்தும் நூலகக் கண்காட்சியும், நூலக வாரநிகழ்வும் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து இரண்டு நாட்கள் நடைபெறவுள்ளன.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

*மனத்தான்ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி இனத்தான்ஆம்*
*இன்னான் எனப்படும் சொல்.*

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## சிங்களப் பேரினவாதத்தின் விலை மதிக்கமுடியாத அடிமை!

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய கடிதம் - யார் யாரைப் பாதித்ததோ இல்லையோ - ஜனாதிபதியின் நெருங்கிய ஆலோசகரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமரைக் குடைந்தெடுந்திருக்கிறது.

அதிலும் - கலாநிதி அன்ரன் பாலசிங்கம் - அரசாங்கத்தின் செயற்திறனற்ற, தாமதமான போக்குகளையும், தமிழ்மக்களுக்குச் சமாதானத்தின் விளைவுகள் எவையும் கிடைத்துவிடவில்லை என்பதையும் குறிப்பிட்டுச் சொன்னவற்றைவிட -

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய கடிதத்திலுள்ள வார்த்தைகள் பற்றியே அதிகம் கவலைப்பட்டிருக்கிறார், குழப்பமடைந்திருக்கிறார், கோபப்பட்டிருக்கிறார் லக்ஷ்மன் கதிர்காமர்.

"அன்ரன் பாலசிங்கத்தின் கடிதத்தின் மொழிநடை, இறைமையுள்ள ஒரு அரசாங்கத்துக்கு எழுதுவதுபோன்று அமையவில்லை.

பொதுவாக, சமாதான முயற்சிகளில் ஈடுபடுவோர் எழுதும் கடிதங்களின் வார்த்தைகளில் மென்மையும், நளினமும் கடைப்பிடிக்கப்படுவது வழமை.

ஆனால், பாலசிங்கம் எழுதிய கடிதத்தில், இந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை" - என்று கூறியிருக்கிறார் கதிர்காமர்.

கதிர்காமரைப் பொறுத்தவரை - எவ்வாறு தான் சிங்கள அரசாங்கமொன்றின் அல்லது சிங்கள ஆட்சியதிகாரத்தின் விசுவாசமிக்க சேவகனாக அல்லது அடிமையாகப் பணியாற்றிக்கொள்ள முடியுமோ - அந்தப் பண்பையே அனைவரிடமும் - குறிப்பாக, விடுதலைப் புலிகளிடம் எதிர்பார்த்திருக்கிறார் என்பது - அவரது கருத்துக்களிலிருந்து தெரியும் முதலாவது வெளிப்படையான உண்மையாகும்.

அதேவேளை - கடிதத்தின் வார்த்தைகளில் அக்கறை காட்டியிருக்கும் அவரால், அக்கடிதத்தில் உள்ளுறைந்திருக்கும் - தமிழரின் தன்மானத்தையும், கௌரவத்தையும், அடிபணியாத வீரத்தையும் புரிந்துகொள்ளமுடியாமற் போனதும் துரதிஷ்டவசமானதே.

பேரினவாதச் சிந்தனைகளுக்குச் சோரம்போன கதிர்காமருக்கு, மேற்குறித்த உயர் மனித விழுமியங்கள் பற்றித் தெரியாததால்தான் அவரால் அவைபற்றிக் குறிப்பிடவும் முடியாமல் போயிருக்கலாம்.

இலங்கை அரசாங்கத்தை இறைமையுள்ளதெனக் குறிப்பிடும் அவரால் - தமிழினத்தை அந்த இறைமையின் பெயரால் சிங்கள அரசாங்கங்கள் வாட்டிவதைத்து, கொடுமைப்படுத்துவதையும் - இன்று சமாதானம் தெற்குக்குக் கிடைத்தும், வட-கிழக்கு இன்னமும் போரின் பாதிப்புக்களிலிருந்து மீட்கப்படாமலிருக்கின்ற துயரத்தையும் தட்டிக்கேட்க முடியாமல்போயிருக்கிறது.

விடுதலைப் புலிகள் அனுப்பிவைத்த கடிதத்தைப் பற்றி சிங்களத் தலைவர்களே எதிர்விதமாகச் சிந்தித்து அலட்டிக்கொள்ளாத போது - கதிர்காமருக்கு அக்கடிதம் மீண்டும் மீண்டும் குழப்பத்தையும், கோபத்தையும் ஏற்படுத்துகின்றதெனின் - கதிர்காமரின் கொழும்பு விசுவாசத்தின் பரிணாமத்தை நாம் பாராட்டித்தான் ஆகவேண்டும்.

கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் கடிதத்தில் குறிப்பிட்டதன்படி - தமிழ்மக்கள் படும் அவலங்களும், துன்பங்களும் பற்றிக் குறிப்பிட்டு, அதனைத் தீர்த்துவைக்க வேண்டுமானால் - அதிகாரங்கள் கொண்ட இடைக்கால நிர்வாகமொன்று ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம் எனக் கூறியிருப்பதை - சர்வதேசமே ஏற்றுக்கொண்டுள்ளது. நோர்வே, ஜப்பான் முதலாக - அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் ஈறாகப் பலரும் இந்த நியாயத்தை வலியுறுத்தியிருக்கின்றனர்.

இந்தநிலையில் - இடைக்கால நிர்வாகமொன்றை விடுதலைப் புலிகளுக்கு வழங்குவதன் மூலம், தனிநாட்டுக்கான அமைப்பை அவர்களுக்கு கொடுத்ததாகிவிடும் என லக்ஷ்மன் கதிர்காமர் எதிர்ப்புக் குரலெழுப்பியுள்ளார்.

ஜே.வி.பி. மற்றும் சிஹல உறுமய ஆகியன தமது எதிர்ப்பை வேறு வார்த்தைகளில் கூறுவதை - தனது ராஜதந்திரப் புலமை மூலம் சற்றே ஆழமாகத் தொட்டுச் சொல்லும் கதிர்காமர்,

'தனியான இராணுவம், கடற்படைப் பிரிவுகளை வைத்துக்கொண்டு - இடைக்கால நிர்வாகத்தை அமுல்படுத்த முடியாது. அத்தகைய நிலை அரசுக்கு ஆபத்தானது' எனவும்,

'புலிகளிடம் இராணுவ, கடற்படைப் பிரிவுகள் உள்ளன என்பதை உலகம் அறியும். இந்த நிலையில் - இடைக்கால நிர்வாகம், இந்த இராணுவ - கடற்படைப் பிரிவுகளைச் சட்டபூர்வமாக்கவே இடமளிக்கும்' என்றும் சொல்கின்றார்.

இடைக்கால நிர்வாகத்தின் மூலம் - தமிழ்மக்களின் போரால் சீரழிந்த வாழ்வு மேன்மையுறும், தமிழ்மக்கள் சுமுகநிலையை அடைவார்கள். அவ்வாறான சுமுகநிலை - இப்போது ஏற்பட்டுள்ள அமைதிக்கு இன்னமும் வலுச்சேர்க்கும் என்பதையெல்லாம் திட்டமிட்டே மறந்து -

உள்ளூரில் சொல்வதுபோல 'குறுக்கால போவதாக' சிந்திக்கும் லக்ஷ்மன் கதிர்காமர் - சிங்களப் பேரினவாதத்திற்குக் கிடைத்த விலைமதிக்கமுடியாத சொத்து என்றே கூறமுடியும்.

# கரும்புகை வெளியேற்றும் வாகனங்கள் அடுத்த மாதம் முதல் கொழும்பில் தடை!

## 80 வீதமான வாகனங்கள் ஓடமுடியாத நிலை

(கொழும்பு)

சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தி, கரும்புகையை வெளியேற்றும் வாகனங்களை, கொழும்பு மாநகரில் தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு பணிப்பாளர் எம்.எஸ்.விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கரும்புகையை வெளியேற்றும் வாகனங்கள் - அடுத்தமாதம முதலாம் திகதி முதல், கொழும்பு நகரவீதிகளில் ஓடுவதற்குத் தடைசெய்யப்படும். அத்துடன், சூழலுக்கு மாசு ஏற்படுத்தும் வகையில், அதிகளவிலான புகையை வெளியேற்றும் வாகனங்களுக்குப் பத்தாயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கையில் 17 இலட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 13 இலட்சம் வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட்டுவருகின்றன. இவற்றில் 60 சதவீதமான வாகனங்கள் சூழலுக்கு மாசு ஏற்படுத்தும் வகையில், அதிக கரும்புகையைக் கக்கியபடி போக்குவரத்தில் ஈடுபடுகின்றன.

புகை கக்கும் வாகனங்களைத் தடைசெய்யும் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், கொழும்பு நகரில் 80 சதவீதமான வாகனங்களைத் தடைசெய்யும் நிலை ஏற்படலாம். இது மிகவும் சவாலான விடயமாக இருந்தாலும், சிறந்த தரத்துடன் வாகனங்களைப் போக்குவரத்தில் ஈடுபடுத்த அறிவுறுத்தல் வழங்கப்படும்.

அடுத்தவருடம் வாகன அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பிகும்போது, சூழல் மாசடைதல் தரச்சான்றிதழ் குறித்து, அதிக கவனம் செலுத்தப்படும் என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

## அரச காணிகளை நோர்வேக்கு விற்பதற்குத் திட்டமாம்!

### அரசுமீது ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள நிலங்களை நோர்வே நாட்டுக்கு விற்க அரசாங்கம் திட்டமிடுவதாக, ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அநுர திஸநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பு ஹைபார்க்கில் இடம்பெற்ற பேரணியில் உரை நிகழ்த்தியபோதே - அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

அநுராதபுர மாவட்டம் - தந்திரிமலையில் 25 ஆயிரம் ஏக்கர அரச காணிகளை நோர்வே நாட்டுக்கு விற்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# மகாபொல நிதியப் பிரச்சினைக்கு தீர்வு இன்றேல் நீதிமன்றம் செல்வோம்!

## பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி நிதியத்திலிருந்து, மகாபொல நம்பிக்கை நிதியத்துக்கு வழங்கப்படவேண்டிய நிதி தொடர்பான, சர்ச்சைகளுக்கு அடுத்தமாத இறுதிக்குள் தீர்வு காணப்படாவிட்டால், நீதிமன்றத்துக்குச் செல்லப்போவதாக, மகாபொல நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் ஷாமிலா பெரேரா தெரிவித்தார்.

தேசிய அபிவிருத்தி லொத்தர்சபை வருமானத்திலிருந்து, ஜனாதிபதி நிதியத்தினூடாக மகாபொல புலமைப்பரிசில் நிதியத்துக்கு, நிதி அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றது.

1997 ஆம் ஆண்டு முதல் - ஜனாதிபதி நிதியத்திலிருந்து, மகாபொல நிதியத்திற்கான நிதி முழுமையாக வழங்கப்படாததால், பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை வழங்குவதில் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

கடந்தகாலத்தில் ஆட்சியிலிருந்த ஜனாதிபதிகள் அனைவருமே, மகாபொல நிதியத்துக்கான நிதியை எந்தப் பிரச்சினையுமின்றி அனுப்பி வைத்தனர். ஆனால், 1997 ஆம் ஆண்டுக்குப்பின்னரே, ஜனாதிபதி நிதியத்தினால் நிதி அனுப்பப்படவில்லை.

இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணப்படாதவிடத்து, நீதிமன்றத்துக்குச்சென்று நியாயம் பெறவேண்டியது அவசியமானதாகிவிடும் என்று, மகாபொல நம்பிக்கை நிதியப் பணிப்பாளர் ஷாமிலா பெரேரா மேலும் தெரிவித்தார்.

# தூயவனின் 'சமரும் மருத்துவமும்' நூல் வெளியீட்டுவிழா நாளை!

போராளி மருத்துவர் தூயவனின் சமர்க்களப் பதிவுகள் அடங்கிய 'சமரும் மருத்துவமும்' நூல் வெளியிட்டு விழா, தமிழீழ கலை பண்பாட்டுக்கழக ஏற்பாட்டில் நாளை இடம் பெறவுள்ளது.

நாவலர் கலாசார மண்டபத்தில் நாளை பி.ப. 4 மணிக்கு நடைபெறவுள்ள இந்த வெளியீட்டு விழாவில், ஈகச்சுடரை மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் பொன்.தியாகம் ஏற்றுவார்.

வரவேற்புரையை கருணாகரன் நிகழ்த்த, வெளியீட்டுவிழாவுக்குப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமைவகிப்பார். யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி சிறப்புரை நிகழ்த்துவார்.

நூலின் வெளியீட்டுரையை, கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்த, நூலை வைத்திய கலாநிதி எஸ்.சிவபாலன் வெளியிட்டு வைப்பார்.

மதிப்பீட்டுரையை எழுத்தாளர் செம்பியன் செல்வன், சமூக மருத்துவ வாழ்நாள் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) ஆகியோர் நிகழ்த்துவர். நூலாசிரியர் தூயவன் பதிலுரை வழங்குவார்.

## தற்காலிகத் தூதுவராக வெஸ்பேர்க் வருகின்றார்!

(ஒஸ்லோ)

முன்னர் இலங்கைக்கான நோர்வே தூதுவராகக் கடமையாற்றிய ஜோன் வெஸ்பேர்க் மீண்டும் தற்காலிகத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் பிறட்ஸ்கர் தனது குடும்பத்துடன் அமெரிக்காவுக்குச் சென்றுள்ளதையடுத்தே, தற்காலிகத் தூதுவராக வெஸ்பேர்க் நியமிக்கப்பட்டுள்ளார்.

வெஸ்பேர்க் இங்கிருந்து ஒஸ்லோவுக்குத் திரும்பியிருந்தபோதிலும், இலங்கை சமாதான முயற்சிகளில் தீவிரமாகப் பங்குபற்றி வந்தார்.

அண்மையில் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனுடன் - வெஸ்பேர்க் பிரதமர், ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியதும் குறிப்பிடத்தக்கது.

## மேலும் ஐம்பதுபேர் மிதிவெடி அகற்றும் பணியில்

யாழ்.குடாநாட்டில் மிதிவெடி அகற்றும் பணியைத் துரிதப்படுத்தும் நோக்கில், புதிதாக ஐம்பது பேருக்கு 'ஹலோ ட்ரஸ்ட்' மிதிவெடி அகற்றும் நிறுவனம் பயிற்சியை அளிக்கவுள்ளது.

இவர்களுக்கான பயிற்சிகள் முடிவடைந்த பின்னர், மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.குடாநாட்டில் இந்நிறுவனத்தினர் பல்வேறு பிரதேசங்களிலும் மிதிவெடி அகற்றும் பணிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இரகசியத் தகவல் கசிந்தது எப்படி? லஞ்ச ஆணையாளரிடம் விசாரணை!

## நாடாளுமன்றத் தெரிவுக்குழு நடவடிக்கை

(கொழும்பு)

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அலுவலகத்திலிருந்து, இரகசியத் தகவல்கள் வெளியில் கசிந்துள்ளமை தொடர்பாக, நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணைகளை நடத்தவுள்ளது.

பல முக்கிய புள்ளிகள் தொடர்பான இரகசியத் தகவல்கள் லஞ்ச உழல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் இருந்து, அரசியல்வாதிகள் சிலரால் பெறப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாகவே நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது. லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் ஆணையாளர் கிங்ஸ்லி விக்கிரமசூரியவும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினால் விசாரிக்கப்படவுள்ளனர்.

இந்த விசாரணைகளுக்காக அடுத்தமாதம் ஒன்பதாம் திகதி, அவரை நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்பாக ஆஜராகுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன், லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றும் மூன்று அதிகாரிகளுக்கும், நாடாளுமன்றத தெரிவுக்குழு விசாரணைக்கு அழைப்புவிடுத்துள்ளது.

# பேரெழுச்சியுடன் உணர்வாய் எழுந்த



தேசியக்கொடியேற்றும் தமிழினி



எழுச்சிச் சுடரேற்றும் துணைவேந்தர்.



அகவணக்கம்



நிகழ்வில் - பேராள



...பௌத்த துறவிகள்



...சிங்கள மக்கள்















வவுனியா வளாக மாணவன் நிக்ஸன்.



கலாநிதி தேவராஜா



கலாராஜ்



கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



# ந்த 'பொங்கு தமிழ்' நிகழ்விலிருந்து...


...ராளிகள்


... முக்கிய பிரமுகர்கள்


விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள்









ஆக்கிரமிப்பு இராணுவ முகாம்


...தகர்க்கப்படுகிறது









சந்திரசேகர சர்மா


அருட்தந்தை பேனாட்


பரமநாதன்


வீக்னேஸ்வரன்


மனோன்மணி சண்முகதாஸ்

# லைபீரிய ஜனாதிபதி பதவிவிலக ஜோர்ஜ் புஷ் பகிரங்க அறிவிப்பு!

## இரத்தக் களரியை நிறுத்த ஒரே வழியாம்



படுகாயமடைந்த சிறுவன் ஒருவன்

லைபீரிய ஜனாதிபதி சார்ள்ஸ் ரெய்லர்- பதவியை விட்டு வெளியேற வேண்டுமெனவும், லைபீரியா மேலும் இரத்த ஆறாக மாறுவதைத் தடுக்க அதுவே வழி எனவும் - அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறிவித்துள்ளார்.

லைபீரியத் தலைநகர் மொன்ரோவியாவில், புதிதாக நடைபெற்றுவரும் மோதல்களைத் தொடர்ந்து- புஷ்ஷின் இந்த அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.

அதேவேளை, அடுத்த ஆண்டு ஜனவரி மாதம்வரை, ஜனாதிபதி ரெய்லரின் பதவிக்காலம் பூர்த்தியாகும் முன்னர், அவர் பதவியிலிருந்து விலகும் சாத்தியங்கள் இல்லையென - லைபீரிய அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

சியரா லியோனில் இயங்கும் - ஐ.நா. ஆதரவுடனான விசேட நீதிமன்றம், லைபீரிய ஜனாதிபதியை போர்க் குற்றவாளியாக அறிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

சியாரா லியோனில், போராளிகளுக்கு ஆதரவளித்தார் என்ற குற்றச்சாட்டு - லைபீரிய ஜனாதிபதி மீது சுமத்தப் பட்டிருக்கிறது.

இதேவேளை, லைபீரியத் தலைநகர் மொன்ரோவியாவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக தாக்குதலை ஆரம்பித்திருக்கும் போராளிகள், தமது தரப்பில் இருந்தான ஷெல் மற்றும் மோட்டார்த் தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

கடந்த சில தினங்களாக நடைபெற்றுவரும் மோதல்களில் மட்டும் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பலியானதாகவும், ஆயிரத்திற்கும் அதிகமானோர் படுகாயமடைந்ததாகவும், லைபீரியாவின் சுகாதார அமைச்சர் பீற்றர் கொலமன் தெரிவித்தார்.

தலைநகருக்குள் நுழைந்த போராளிகள் - சில இடங்களில் அரச படைகளால் பின்தள்ளப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க- நாட்டின் மூன்றில் இரண்டு பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க, ஒற்றுமைக்கும் ஜனநாயகத்திற்குமான லைபீரிய முன்னணியின் போராளிகள், மொன்றோவியாவைத் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டிருக்கும்வரை, தாம் போரை நிறுத்தப்போவதில்லை எனக் கூறியிருக்கின்றனர்.



காஸா பகுதியில் - குடியேற்றம் ஒன்றிலிருந்து அகல மறுக்கும் யூதச் சிறுவனொருவன், இஸ்ரேலியப் பொலிஸாரால் பலவந்தமாக அப்புறப்படுத்தப்படுகிறான்.

# சவூதித் தாக்குதல் சூத்திரதாரி சரணடைந்திருப்பதாக தகவல்!



சரணடைந்த அல்-காம்டி

சவூதி அரேபியாவின் ரியாத் நகரில் - அமெரிக்கர்கள் மீதான கார் குண்டுவெடிப்புக்களின் சூத்திரதாரியான, அலி அப்துல் ரஹ்மான் அல் - காம்டி என்பவர் தம்மிடம் சரணடைந்திருப்பதாக - சவூதி அரசின் பிரதி உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மே மாதம் பன்னிரண்டாம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலின் முக்கிய சந்தேக நபர்கள் பட்டியலில் இவர் இரண்டாம் இடத்திலிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அல் - காம்டியின் சரணடைவு, சவூதியில் அல் - கொய்டா அமைப்பினருக்குப் பலத்த பின்னடைவே என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரியாத்தில் - அமெரிக்கர்களும் மேற்கு நாட்டவர்களும் வசித்து வந்த குடியிருப்புப் பகுதியில் நடந்த தாக்குதலில் 9 தற்கொலை படையாளிகள் உட்பட 35 பேர் கொல்லப் பட்டமை தெரிந்ததே.

உலகவலம்

# பக்தாத்தில் காணாமற்போன இரு அமெரிக்கப் படையினர்!

## வாகனம் நின்ற இடத்தில் தேங்கிய நிலையில் இரத்தம்



ஈராக் தலைநகர் பக்தாக்கில் - இரண்டு அமெரிக்கப் படையினர், தமது வாகனத்துடன் காணாமல் போயுள்ளனர்.

இவர்களை தொடர்புகொள்ளத் தொலைத் தொர்புக் கருவிகள் வழியாக முயன்றபோதும்- அது கைகூடவில்லை எனக் கூறப்படுகிறது.

இவர்களைத் தேடி தற்போது அமெரிக்க ஹெலிகள் தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்தப் படையினர் கடத்தப்பட்ட இடத்தில், இரத்தம் தேங்கியுள்ள நிலையில் காணப்பட்டதனால் - இவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற அச்சமும் ஏனைய அமெரிக் கப் படையினரிடம் பரவியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் - ஈராக் மீதான போர் நிறுத்தப்பட்டதாக அறிவித்தபின்னர், கடந்த இரண்டு மாதங்களில் - 20 அமெரிக்கப் படையினரும், 6 பிரிட்டிஷ் படையினரும் இதுவரை ஈராக்கில் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதுடெல்கி விபச்சார சீரழிவில் கல்லூரிகளின் மாணவிகளும்!



இந்தியத்தலைநகர் புதுடெல்கியில்- விபச்சாரத்தில் ஈடுபடும் பெண்களில் - கல்லூரி மாணவிகளும், நடுத்தர வயதுடைய குடும்பப் பெண்களும் அதிகரித்திருப்பதாக, திடுக்கிடும் தகவலொன்று வெளியாகியுள்ளது.

உடனடியாகப் பணம் சம்பாதிக்கும் ஆசையில் இவர்கள் இப்படியான சமூகச்சீரழிவுக்கு ஆட்படுவதாக, புதுடெல்கியின் பிரதிப் பொலிஸ் ஆணையாளர் சஞ்சே பெனிவால் தெரிவித்தார்.

அண்மையில் புதுடெல்கியில் பெருமெடுப்பில் நடத்தப்பட்ட, விபச்சார நிலையங்கள் மீதான தேடுதல் நடவடிக்கையில் இந்த நிலை தெரிய வந்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறான பெண்களைத் திருத்தி, அவர்களை விபச்சாரச் சாக்கடைக்குள்ளிருந்து வெளியே எடுப்பதில், தற்போது சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஈடுபட ஆரம்பித்துள்ளன.

மும்பாய், பெங்களூர் ஆகிய பகுதிகளிலிருந்து - கல்விகற்பதற்காக புதுடெல்கி வரும் பெண்களே, இவ்விதம் பெருமளவில் தவறான வழிக்குச் செல்வதாக, புதுடெல்கியைத் தளமாகக் கொண்டு இயங்கும் பெண்கள் அமைப்பொன்றின் தலைவியான ஜோத்சனா சட்டர்ஜி தெரிவித்தார்.

# செவ்வாயில் தண்ணீருக்கான சாத்தியம் உறுதியாகின்றது!



செவ்வாயின் தரையின் அமைப்பு

செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் இருப்பதற்கான வலுவான ஆதாரங்கள் கிடைக்கத் தொடங்கியிருப்பதாக, அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான 'நாஸா'வின் அதிகாரிகள் கூறுகின்றனர்.

அங்குள்ள சமுத்திரங்களை, பனிக்கட்டிகள் மூடியிருப்பதான சந்தேகமும் தற்போது வலுத்துவருகிறது.

அமெரிக்காவிலுள்ள மிச்சிக்கன் ஏரியை இருமுறை நிரப்புவதற்குத் தேவையான நீர்வளம் அங்கிருப்பதாக நாஸா விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

செவ்வாயை ஆராயச் சென்றிருக்கும் 'மார்ஸ் ஒடிசி' விண்கலமும், இதுதொடர்பான தகவல்களை அனுப்பிவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனாலும் - இந்நீர், மனிதர்கள் அருந்தக்கூடியதாக, தூய்மையானதாக இருக்குமா என்ற சந்தேகங்களும் எழவே செய்கின்றன.



பிரேஸிலில் வேலையற்றோர் எண்ணிக்கை பெருகிவரும் நிலையில் - அங்கு சுத்திகரிப்புத் தொழிலாளர்களாகப் பணியாற்றத் திரண்ட மக்கள் கூட்டத்தை பொலிஸார் ஒழுங்குபடுத்தும் காட்சி இது.

# மிகவேகமாக அதிகரித்துவரும் அமேஸன் காடுகளின் அழிப்பு!

உலகின் மிகப்பெரும் வனப் பகுதியான அமேஸன் காட்டுப்பகுதி, மனிதர்களால் வேகமாகச் சிதைக்கப்பட்டு வருவதாக - செய்மதித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரேஸிலின் 25,000 சதுரகிலோ மீற்றர் காட்டுப்பகுதி - ஒரு வருடத்திற்குள், விவசாய நடவடிக்கைகளுக்காக அழிக்கப்பட்டிருப்பதாக - தேசிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

தென் அமேஸன் பகுதியின் - சோயா உற்பத்தியில் ஈடுபடுவோரே காடழிப்பில் பெருமளவில் ஈடுபடுகின்றனர். நல்ல இலாபம் தரும் சோயா உற்பத்தியால், காடழிப்பு ஒரு பொருட்டாக அங்கு கருதப்படவில்லை என சூழலியலாளர்கள் கூறுகின்றனர்.

உலகின் மழைக் காடுகளில் பிரதானமானதும், முக்கியமானதுமான அமேஸன்- இன்னமும் மனிதர்கள் நுழையமுடியாத கன்னிக் காட்டுப்பகுதிகளைக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## அப்துல் கலாம் காஷ்மீர் விஜயம்



இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்திற்கு, அந்நாட்டு ஜனாதிபதி அப்துல் கலாம் விரைவில் விஜயம் செய்யவுள்ளார்.

அவரது விஜயத்துக்கான ஏற்பாடுகள் மிகப் பெரியளவில் மேற்கொள்ளப்படுவதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சிறுவர் அரங்கம்

# துணிவை நேசித்த பையன்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

துணிவும், உறுதிப்பாடும் அவருடைய குணவியல்புகளில் காணப்பட்டன.

அலெக்சாண்டர் பெரும் மனிதனாக வளர்ந்ததும், தன்னுடைய கனவுகளை நனவாக்கவும், உலகை வெற்றிகொள்ளவும் புறப்பட்டான். முதலில் பால்கன் நாடுகளையும், பின்பு ஆசிய மைனரையும் வெற்றிகொண்டார். எகிப்தின் மன்னனை வெற்றிகொண்ட பின், கிழக்கு நோக்கிப் படையெடுத்துப் பபிலோனுக்கும், பேர்சியாவுக்கும் சென்று வெற்றிக்கொடி நாட்டினார். இறுதியாகக் கைபர் கணவாய் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்தார்.

மன்னன் போரஸ் - தன்னுடைய இந்திய வீரர்களுடன் வெற்றி வீரர்களான கிரேக்கரைத் துணிவுடன் எதிர்கொண்டு போரிட்டார். கிரேக்கர்கள் மிகுந்த பலசாலிகளாக இருந்தபடியால், போரில் வெற்றிபெற்றுப் போரஸைச் சிறைப்பிடித்தனர்.

ஒரு அடிமையைப்போலக் கைகளையும், கால்களையும் கட்டிக் கொண்டுவந்து அலெக்சாண்டர் முன்னிறுத்தினர். வெற்றிபெற்ற கிரேக்க மன்னன், அவரைப் பார்த்து "நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்" எனத் தோற்கடிக்கப்பட்ட எதிரியைக் கேட்டார்.

"ஒரு துணிவுமிக்க போர் வீரன், தன்னுடைய சகபாடியை



நடத்துவதுபோல, என்னையும் நடத்துக" எனப் போரஸ் உறுதியாகப் பதிலளித்தான்.

அலெக்சாண்டர் இதைக் கேட்டபொழுது ஆச்சரியமடைந்தார். போரஸிடம் அவருடைய வாளைத் திருப்பிக் கொடுத்தார். பஞ்சாப் முழுவதற்கும் அவரை மன்னனாக்கினார். இருவரும் பெரும் நண்பர்களானார்கள்.

ஒரு துணிவுமிக்க மனிதன், மற்றவர்களிடம் துணிவைக் காணும்பொழுது, அதை அங்கீகரிப்பதோடு அதை வியந்து பாராட்டுவான்.

ஒருமுறை அலெக்சாண்டர் ஒரு அறிஞரான டயோஜினிஸ்ஸைக் காணச்சென்றார். ஒரு வறிய மனிதனிடம், உலகை வெற்றிகொண்ட ஒருவரைப்போல அவரிடம் பேசும்பொழுது, "உங்களை மகிழ்விக்கச் செய்ய, நான் என்ன செய்யவேண்டும்" என்றார். டயோஜினிஸ் பணத்தை அல்லது உயர்ந்த அந்தஸ்தைக் கேட்பார் என நினைத்திருந்தார் அலெக்சாண்டர்.

ஆனால், டயோஜினிஸ் எதையுமே கேட்கவில்லை. இதனால், அலெக்சாண்டர் வெட்கமுற்றார். அவர் மாளிகைக்குத் திரும்பிய பொழுது, தனக்குள்தானே எண்ணினார். 'நான் அலெக்சாண்டராக இல்லாமலிருந்தால், டயோஜினிஸாகவே இருக்க விரும்புகின்றேன். இந்தச் சாதாரண மனிதனிடமிருந்து கற்றுக்கொள்ள, அவர் அதிகம் பணிவுள்ளவராக இருந்தார்' என்று.

கிரீஸ் நாட்டின் கடலில் டயோமெடிஸ் என்னும் கடற்கொள்ளைக்காரன் ஒருவன், தன்னுடைய ஆட்களுக்காக, கடலில் பயணஞ்செய்யும் மக்களைக் கொள்ளையடித்து வந்தான். இதை அறிந்த அலெக்சாண்டர் தன்னுடைய கடற்படையை அனுப்பி, அவனைப் பிடித்துவரச் செய்தார்.

"என்னுடைய பாதுகாப்பின் கீழிருக்கும் கடலில் அமைதியைக் குழப்ப உனக்கு என்ன துணிவு இருக்கவேண்டும்" என்று கோபத்துடன் கேட்டார்.

டயோமெடிஸ் துணிவுடன் எழுந்து நின்று, அவரை அச்சமின்றிப் பார்த்து, அவன் கூறினான். "ஐயா நீங்கள் உங்களையே கேட்கவேண்டும். உலகின் அமைதியைக் குழப்புவதற்கு எனக்கு எவ்வளவு துணிவு இருக்க வேண்டும். என்னிடம் ஒரேயொரு கப்பல் மட்டும் உள்ளது. நீங்கள் ஒரு கப்பற்படையையே வைத்திருக்கிறீர்கள். கிரீஸைச் சுற்றியுள்ள கடலை, நான் ஒரு கலம் வைத்துக் கொண்டு கடற்போக்குவரத்தைக் குழப்புவதால், கடற்கொள்ளைக்காரன் என என்னை அழைக்கிறீர்கள். ஆனால், நீங்கள் இராணுவத்தையும், கடற்படையையும் வைத்துக்கொண்டு, உலகைக் குழப்பிக்கொண்டு உங்களைச் சக்கரவர்த்தி என அழைக்கின்றீர்கள். ஒரே செயலை இருவர் செய்யும் பொழுது, ஒருவரைக் கடற்கொள்ளைக்காரர் என்றும், மற்றவரைச் சக்கரவர்த்தி என்றும் குறிப்பிடுவது நியாயமா? கடவுள் இலகுவாக உங்களைக் கடற்கொள்ளைக்காரனாகவும், என்னைச் சக்கரவர்த்தியாகவும் ஆக்கியிருக்கமுடியும்."

அலெக்சாண்டர் சற்று நேரம் அமைதியாக இருந்தார். "நீங்கள் கூறுவது சரி" என்று கூறினார் அவனுக்கு. ஒரு சிறிய இராச்சியத்தையும் ஆளக்கொடுத்தார்.

மற்றொரு மனிதனுடைய செயற்பாடுகளைப் போலவே, தானும் செய்துகொண்டு, அவனை மதிப்பிடத் தனக்கு உரிமையில்லை என்பதை அவர் புரிந்துகொண்டார்.

வறுமைதான் டயோமெடிஸைக் கடற்கொள்ளைக்காரனாக்கியது. ஆகவே, அவனை ஒரு சிறந்த மனிதனாக்க ஒரு சந்தர்ப்பத்தை வழங்கினார்.

ஒரு உண்மையான மனிதன் - தன்னுடைய தவறுகளை, மற்றவர் சுட்டிக்காட்டும்பொழுது, அதை எப்பொழுதும் ஒப்புக்கொள்கிறான். அலெக்சாண்டரும் அவ்வாறு செய்ததைக் காட்டும் ஒரு கதை

# அலெக்சாண்டர்

இனி..

ஒரு புகழ்பெற்ற ஓவியரைப் பார்க்க அலெக்சாண்டர் ஒருநாள் சென்றார். அந்த ஓவியர் மன்னரை வாழ்த்தி வரவேற்றார். பின்பு, தன்னுடைய வேலையைத் தொடர்ந்து செய்தார், மகிழ்ச்சியாக இருப்பதற்குப் பணமும், அதிகாரமும் அவசியம் என அவர் எண்ணினார். ஓவியக்கலை பற்றித் தனக்கும் ஓரளவு தெரியும் என அவருக்குக் காட்ட அலெக்சாண்டர் விரும்பினார். ஆகவே, சித்திரங்கள் வரைவது,

(IV பக்கம் பார்க்க).



# கொட்டாவி - சில அறிவியல் தகவல்கள்

ஒரு கூட்டத்தில் இருக்கும்போது, அழகாய் கொட்டாவி விடுங்கள். அதன் பிறகு, அங்கிருப்பவர்களில் எத்தனை 'பேர் கொட்டாவி விடுகிறார்கள் என்று கவனியுங்கள், வேடிக்கையாக இருக்கும். ஒரு கொட்டாவிக்குப் பதில் கொட்டாவி, அதற்கு இன்னொரு கொட்டாவி என்று ஒரு கொட்டாவிச் சங்கிலியே உருவாகியிருக்கும்.

- சராசரியாக ஒரு கொட்டாவி ஆறு வினாடிகள் நீடிக்கும்.
- 55 சதவீத மக்கள், வேறொருவர் கொட்டாவி விடுவதைப் பார்த்த, 5 நிமிடங்களுக்குள் கொட்டாவி விடுகிறார்கள்.
- கொட்டாவி விடும்போது, நம் இதயத்துடிப்பு 30 சதவீதம் அதிகரிக்கிறது.
- பார்வையற்றோர்கூட கொட்டாவி விடும் ஒலியைக் கேட்டவுடன் கொட்டாவி விடுவார்கள்.

சரி... கொட்டாவி என்றால் என்ன? வாயை அகலத் திறந்து ஆழமாகச் சுவாசிக்கிறோம் இல்லையா? அதுதான் கொட்டாவி. நம் விருப்பத்துக்கு உட்படாத, நம் எண்ணமில்லாமலேயே நடைபெறுகிற ஒரு செயல். பிறப்பதற்கு முன்பே ஒரு குழந்தை கொட்டாவி விடத் தொடங்கிவிடுகிறது. தாயின் வயிற்றுக்குள் இருக்கும் பதினோரு வாரக் கருவே கொட்டாவி விடுவதை மருத்துவ ஆராய்ச்சிகள் உறுதிப்படுத்தியிருக்கின்றன. கொட்டாவி விடும்போது நம் உடலில் பல பகுதிகள் வேலை செய்கின்றன.



முதலில் வாய் திறக்கிறது. எவ்வளவுக்கெவ்வளவு காற்றை உள்ளிழுக்க முடியுமோ, அவ்வளவு காற்று இடம்விடும் வகையில், தாடை விலகுகிறது. காற்று உள்ளிழுக்கப்பட்டு நுரையீரல் நிரம்புகிறது. வயிற்றுத்தசை தளர்ந்து, உதரவிதானம் தள்ளப்படுகிறது.

பொதுவாகக் கொட்டாவி என்பது - களைப்பு, சோர்வு அல்லது அரைத்தூக்க நிலையில் ஏற்படுவதாகச் சொல்லப்பட்டாலும், இது பற்றி ஏராளமான ஆராய்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. உடற்கூறியல் விஞ்ஞானிகள் - உள்வாங்கும் காற்றில் ஒட்சிசன் குறைவாகிவிட்டால், தேவைக்கதிகமான காபனீரொட்சைட் வாயுவை வெளியேற்றி, தேவையான ஒட்சிசனைப் பெறுவதற்காகக் கொட்டாவி ஏற்படுகிறது' என்கிறார்கள். கூட்டங்களின்போது நிறையப் பேர் இருப்பதால், வெளியேறப்படும் காபனீரொட்சைட்டின் அளவு அதிகமாகவே இருக்கும். ஒருவர் கொட்டாவி விடும்போது, மற்றவர்க்கும் அதே சூழ்நிலை என்பதால், எல்லோரும் கொட்டாவி விடுகிறார்கள்.

ஒலிம்பிக் உட்பட விளையாட்டுகளில் பலர் போட்டி தொடங்கும் முன் கொட்டாவி விடுகிறார்கள். ஒட்சிசன் குறைபாடு, களைப்புப் போன்ற காரணங்கள் இங்கு அடிபடுகின்றன. ஒரு ஆராய்ச்சியாளர் மிகுந்த ஆராய்ச்சிக்குப் பிறகு, சுற்றுச்சூழலில் ஒட்சிசன் அளவை அதிகப்படுத்துவதாலோ அல்லது காபனீரொட்சைட்டின் அளவைக் குறைப்பதாலோ, கொட்டாவியைத் தடுக்கமுடியாது எனக் கண்டுபிடித்துள்ளனர். இதற்கான காரணம், இன்னும் ஆராய்ச்சிக்குரியதாகவே இருக்கின்றது.

மனிதர்கள் தோன்றிய காலத்திலிருந்தே கொட்டாவியும் தவிர்க்க முடியாத அங்கமாகிவிட்டது. நுரையீரலில் காற்று நிரம்பி இதயத்தின் செயற்பாட்டை அதிகரிக்கும் பயனுள்ள வேலையாக இருந்தாலும், கொட்டாவியைப் பற்றிய முழுமையான தெளிவில்லை.

நம் மூளையின் - ஏதோவொரு கண்டுபிடிக்கப்படாத பகுதியின் செயற்பாடாகக் கொட்டாவி இருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

இன்னொரு விடயம் - பூனை, நாய், கரடி - ஏன் மீன்களுக்குக் கூடக் கொட்டாவிவரும். இதனால், கொட்டாவி ஒரு தகவல் பரிமாற்றத்தின் விளைவு என்றும் ஒரு கருத்துள்ளது.

## வார்த்தை விளையாட்டு - 38 இன் சரியான விடைகள்.



**இடமிருந்து வலம்**

1. இந்தியா.
5. கபடி.
7. அப்பம்.
9. கவலை.
11. வசை.

**மேலிருந்து கீழ்**

1. இலுப்பை.
2. திலீபன்.
3. யாகம்.
4. முடி.
6. பகலவன்.
8. அரவம்.
10. குலை.
12. சைகை.

## வார்த்தை விளையாட்டு - 38

இல் பங்குபற்றிச் சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.



*1 ஆம் பரிசு -*
ம.புவீந்திரன்
"இந்திர பவனம்",
நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

*2 ஆம் பரிசு -*
க.கஜீபா
நெடும்புலம் கிழக்கு,
சுன்னாகம்.

*3 ஆம் பரிசு -*
கோ.ஸ்ரீநாத்
இல.117 A, பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

## துணிவை நேசித்த....

வர்ணங்களைக் கலப்பது மற்றும் வேறு விடயங்களைப் பற்றியும் தான் சிறிதளவுதான் அறிந்திருந்த போதிலும், அதிகம் அவர் கதைத்துக்கொண்டிருந்தார். ஓவியர் நீண்டநேரம் பொறுமையாக இருந்தார். கடைசியாக அவரால் பொறுமையாக இருக்க முடியவில்லை. அவர் மன்னரைத் திரும்பிப் பார்த்துக் கூறினார்.

"ஓ! வலிமைமிக்க அரசே, என்னுடைய வர்ணங்களைக் கலந்துகொண்டிருக்கும் சிறுபையன், உங்களைப் பார்த்து நகைப்பதை நீங்கள் காணவில்லையா? உங்களைப் போன்ற ஒரு பேரரசனுக்கு அது ஒரு மரியாதைக்குரிய சமிக்ஞையா?"

அலெக்சாண்டர் பேசுவதை உடனே நிறுத்தினார். தான் அறியாத ஒன்றைப்பற்றி, மன்னர் கூடக் கதைக்கக்கூடாது என்பதை அவர் உணர்ந்துகொண்டார். ஒருவர் தன்னுடைய அறியாமையை ஒப்புக்கொள்வதற்கும் துணிவு வேண்டும்.

ஒருவர் தன்னுடைய சொந்தத் தவறுகளை ஏற்றுக்கொள்வதற்கும், துணிவு வேண்டும். துணிவு என்பது - போர்க்களத்துடன் மட்டும் சம்பந்தப்பட்ட அஞ்சாத விடயமல்ல.

அலெக்சாண்டர் ஒரு பலம்மிக்க வெற்றிவீரனாக இருந்த போதிலும், யுத்தகளத்தில் அவருடைய வெற்றிகளைவிட, இந்த விடயங்கள்தான் எங்களுடைய நினைவில் நிலைத்திருக்கின்றன. ஒரு மனிதன் மரணமடைந்து மண்ணோடு மண்ணாகிப் போன பின்னரும், நீண்டகாலத்துக்கு நினைவில் நிற்பது மன்னன் என்ற புகழ் அல்ல. வாழ்க்கையில் துன்பங்களை எதிர்கொள்ளும் பொழுது, துணிவை வெளிக்காட்டுவதுதான்.

இன்றும், நாளையும் சகல இளைஞர்களுக்கும் ஒரு கலங்கரை விளக்கமாக நின்று வழிகாட்டுவது அவருடைய துணிவுதான்.

# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- கை.நிஷாந்தன்
கற்கும் பாடசாலை :-
கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 3
ஆர்வமுள்ள துறைகள் :-
புத்தகம் வாசித்தல், விளையாட்டு, பத்திரிகை வாசித்தல்.



முழுப்பெயர் :- இ.மைக்கல் அனோஜ்
கற்கும் பாடசாலை :-
அ்ர்ச. அன்னம்மாள் பாடசாலை.
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
நடனம், பாட்டு, விளையாட்டு, முத்திரை சேகரித்தல்.



முழுப்பெயர் :- வி.தனுஜா
கற்கும் பாடசாலை :-
அச்சுவேலி புனித தெரெசா மகா வித்தியாலயம்,
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.



முழுப்பெயர் :- ம.நிரோஷனா
கற்கும் பாடசாலை :-
இந்து மகளிர் கல்லூரி.
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
நடனத்துறை, தொலைக்காட்சி பார்த்தல், பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர்:- சி.நடேஸ்
கற்கும் பாடசாலை :- வல்வை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை.
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :- முத்திரை சேகரித்தல், கதை படித்தல்.

முழுப்பெயர்:- க.தினேஸ்
கற்கும் பாடசாலை :- கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரி
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :- ஆங்கிலம், பத்திரிகை வாசித்தல், விளையாட்டு.

முழுப்பெயர்:- அ.அனுஷா
கற்கும் பாடசாலை :- தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :- முத்திரை சேகரித்தல், வானொலி கேட்டல்.

முழுப்பெயர்:- ந.ரமேஸ்
கற்கும் பாடசாலை :- வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :- தொலைக்காட்சி பார்த்தல், கதைப் புத்தகம் வாசித்தல், கிரிக்கெட்.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்

## விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
:..............................

.................... திகதி
.................... ஒப்பம்

.................... அதிபர்/ஆசிரியர் ஒப்பம்
.................... பெற்றோர் ஒப்பம்

## பறவைகள் பற்றிய சில தகவல்

1. இறக்கை இல்லாத பறவை - கிவி
2. அதிக நீரருந்தும் பறவை - புறா
3. மிகப் பெரிய முட்டையிடும் பறவை - தீக்கோழி
4. மிகச்சிறிய முட்டையிடும் பறவை - வெர்வெயின்
5. மிக வேகமாக பறக்கும் பறவை - சுவிப்ட் (மணிக்கு 200 மைல்)
6. நீண்ட காலம் வாழும் பறவை - ஒஸ்ரிச்
7. அவுஸ்ரேலியாவிலே பறக்க முடியாத பறவை - எமு

ஆக்கம்: அ.ரேணுகா தரம் 7B கிளி/மத்திய கல்லூரி.

இங்கே மடிக்கவும்



# சோம்பேறி நரி!

பாகம் 02




# உங்கள் கைவண்ணம்



கி.லிஸ்பன் கனிசியஸ்,
தரம் - 08,
நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

ச.ரவிவர்மன்,
தரம் - 9.
கொக்குவில் இந்துக் கலலூரி.



# விடுகதைகளும் விடைகளும்

1. முள்ளில்லாத பற்றைக்குள், எலும்பில்லாத மாடு. அது என்ன?
பேன்.
2. எல்லையில்லாத வலையிலே, எண்ணமுடியாத மீன்கள். அது என்ன?
நட்சத்திரங்கள்.
3. பகலிலே தூங்குவான் இரவிலே அலறுவான். அது என்ன?
ஆந்தை.
4. அண்ணன், தம்பி இரண்டு பேர், அவர்களைச் சுற்றிப் பன்னிரண்டு பேர். அதுஎன்ன?
கடிகாரம்.
5. முக்காடு போட்டால் மூலையில் இருப்பான். காகிதத்தைக் கண்டால் கண்ணீர் வடிப்பான். அது என்ன?
பேனை.
6. கழுத்துண்டு தலையில்லை, கையுண்டு காலில்லை. அது என்ன?
சட்டை.

ஈ.சிந்துஜா
தரம் - 7
நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.

---

1. வாயிலே பூத்து, வாயிலே மறையும் பூ. அது என்ன?
சிரிப்பு.
2. செம்பு நிறையச் சிவப்பு நிறமுத்து. அது என்ன?
மாதுளம்பழம்.
3. கண்ணீர்விட்டே கடைசிவரை, ஒளிதருவான். அது என்ன?
மெழுகுதிரி.
4. மொட்டைப் பாட்டிக்கு உச்சியிலே குடும்பி. அது என்ன?
தேங்காய்.
5. பல்லுண்டு, ஆனால் கடிக்கமாட்டான். அது என்ன?
சீப்பு.

லோ.தேனுஷா
கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்.

# காக்கைகள் பார்



காகா என்றே சத்தம் இடும்
கறுப்பு நிறக் காக்கைகள் பார்.
ஆகா அவைகள் ஒன்று சேர்ந்து
உணவை உண்ணும் அழகைப் பார்!

கல்லால் எறிந்து துரத்தும் போதும்
கூடிப் பறக்கும் பண்பைப் பார்.
எல்லாம் வல்ல மனிதா நீயும்
அவற்றைப் போல வாழப் பார்!

அரியாலையூர் சி.சிவதாசன்

# விடுதலைப் புலிகளின் கரத்தை பலப்படுத்துவதே தன்மானமுள்ள ஒவ்வொரு தமிழனின் கடமை!

## 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



வரலாற்றின் திருப்புமுனையில் நின்றுகொண்டிருக்கும் தமிழ்த் தேசிய இனத்தின் - அரசியல் அபிலாஷைகளை வெளிப்படுத்தும் 'பொங்கு தமிழ்' நிகழ்வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் உரையாற்றுவதையிட்டுப் பெருமிதம் அடைகின்றேன்.

கடந்தகால 'பொங்கு தமிழ்' நிகழ்வுகள், முதலாவதாக போர்ச் சூழலில் மக்களின் எழுச்சியின் மத்தியில் நடந்தன. உருப்பெற்ற யுத்த நிறுத்தம், விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கம், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் - விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை ஆகிய கருப்பொருட்கள் அங்கு முன்நிலைப் படுத்தப்பட்டன.

இரண்டாவது நிகழ்வில், தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாஷைகளான - தமிழ்த் தேசியஇனம், தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை ஆகியன வலியுத்தப்பட்டன.

முதல் இரண்டு 'பொங்கு தமிழ்' நிகழ்வுகளின்போது, வலியுறுத்தப்பட்ட கருப்பொருள்களின் அடிப்படையில், யுத்தநிறுத்தம் அமுலாக்கப்பட்டு - பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டாலும், கடந்த 16 மாத யுத்த நிறுத்தத்தில் தமிழ்த் தேசிய இனத்தின் அகதி வாழ்க்கை, அவல வாழ்க்கை இன்னும் தொடர்கிறது.

சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பு தமிழர் தாயகத்தில் தொடர்கிறது. தமிழ்மக்கள் மீதான இராணுவ நெருக்குவாரங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன. இவ்வாறான சூழ்நிலையில், யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்ட இயல்பு நிலை, தமிழர் தாயகத்தில் உருவாக்கப்படமுடியாது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

'பொங்கு தமிழ்' நிகழ்வில் உரையாற்றிய அவர், மேலும் பேசும்போது -

இப்படியான காரணங்களினாலும், அத்துடன் - தற்போது முன்னெடுத்துச் செல்லப்படும் பேச்சுவார்த்தைகளில், தமிழர் தரப்பு சமபங்காளி அந்தஸ்திலிருந்து ஓரங்கட்டப்பட்டபடியாலும், பேச்சுவார்த்தைகள் தேக்க நிலையை அடைந்துள்ளன.

அதன் பிரதிபலிப்பாகச் சமாதானத்தை நோக்கி ஏங்கிக்கொண்டிருந்த தமிழினம், பேச்சுவார்த்தையில் நம்பிக்கையிழந்துகொண்டு வருகிறார்கள் என்பது நாம் எல்லோரும் அறிந்த உண்மை.

பேச்சுவார்த்தை மீதான நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு, தமிழர் தரப்பினரின் சமபங்காளி அந்தஸ்து மீள வழங்கப்பட்டு, தமிழர் தாயகத்தில் இயல்புநிலையை உருவாக்க, யுத்தத்தினால் சின்னாபின்னப்படுத்தப்பட்ட பொருளாதார வளங்களை மீளமைப்புச்செய்ய - சகல அரசியல், நிதி, நிர்வாகக் கட்டமைப்புக்களை நிர்வகிக்க, அதிகார வலுவுள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு - தமிழர் தாயகத்திற்கு வழங்கப்படவேண்டும். இது, தமிழீழ விடுதலைப் புலிகளின் கீழ் இயங்க வேண்டும். இந்த இடைக்கால நிர்வாகம் - எமது இனத்தின் இறுதி இலட்சியத்திற்கான முன்னோடியாக அமையவேண்டும்.

இந்த இடைக்கால நிர்வாக கட்டமைப்பை தமிழர் தாயகத்திற்கு வழங்கும் பொறுப்பு, தென்னிலங்கை சிங்கள தலைமைத்துவத்திற்கே உரியது. அந்தப் பொறுப்பை அவர்கள் சரிவர செயற்படுத்தாத பட்சத்தில், பேச்சுவார்த்தை முறிவடைவதற்கான முழுப்பொறுப்பையும் சிங்கள தலைமைத்துவமே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

கடந்த 50 வருடங்களாக ஏமாற்றப்பட்ட தமிழ்த் தேசிய இனம், இப்போது ஏமாற்றப்பட முடியாத, பலமிக்க தமிழ் தலைமைத்துவத்தின் கீழ் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது.

இன்றைய 'பொங்கு தமிழ்' நிகழ்வின் கருப்பொருளான - 'எமது மண் எமக்கு வேண்டும்' என்ற கொள்கையின் அடிப்படையில் செயற்படுகின்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் கரங்களைப் பலப்படுத்துவது, ஒவ்வொரு தன்மானமுள்ள தமிழனின் கடமையாகும்.

விடுதலைப் புலிகளின் பலம் தான், தமிழர் தரப்பின் பேச்சுவார்த்தைக்கான பலம் என்ற உண்மையை உங்களிடம் வலியுத்த விரும்புகின்றேன்.

2001 ஆம் ஆண்டுப் பொது தேர்தல் நடைபெற்ற போது, தமிழ் தேசிய இனம் - தாம், எமது இனத்தின் பேரால் ஒற்றுமைப்பட்டு நிற்பதையும், தாம், தமிழீழ விடுதலைப் புலிகளின் பின் முற்றுமுழுதாக அணிதிரண்டிருப்பதையும், முழு உலகிற்குமே பறைசாற்றியது. இந்த ஒற்றுமைதான் இன்று நடைபெறும் பேச்சுவார்த்தை மேசையில் எமது கரங்களை பலப்படுத்தியுள்ளது. இந்த ஒற்றுமையை நாம் எக்காரணம் கொண்டும் பலவீனப்படுத்த அனுமதிக்கமுடியாது. ஒற்றுமை நீடித்தால் எமது விடிவு நிச்சயம் என்றார்.

# இன்னல்களை சர்வதேசத்துக்கு 'பொங்கு தமிழ்' எடுத்துக்கூறும்

## மனிதநேய அமைப்புக்களின் தலைவர் பரமநாதன்



தற்போதைய நெருக்கடியான காலகட்டத்தில்- சர்வதேச சமூகத்திற்கு எமது இன்னல்களை எடுத்துக் கூறக்கூடிய வகையில் 'பொங்கு தமிழ்' நிகழ்வு அமைந்துள்ளது'' இவ்வாறு மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் பரமநாதன் தெரிவித்தார்.

நேற்றைய 'பொங்கு தமிழ்' நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது -

முக்கியமாகத் தற்போது தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும். விடுதலைப் புலிகளிடம் உடனடியாக இடைக்கால நிர்வாகம் முழுஅதிகாரத்துடன் வழங்கப்படவேண்டும்.

எங்களுக்கு, இன்றைய கால கட்டத்தில் - மிக்க அவதானமும், நிதானமும் தேவைப்படுகின்றது. சரித்திரத்தை நாம் மாற்றியமைக்க முடியாது. ஆனால், அதிலிருந்து பல பாடங்களைப் பெற்று, தவறுகளைத் தவிர்த்துக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. அந்தவகையில், நாம் பொறுமையைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கின்றோம். பொறுத்தார் அரசாழ்வார். எங்கள் இனம்- கௌரவத்துடனும், சுயநிர்ணயத்துடனும் வாழ்வதற்கு வழிவகுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

### பௌத்த துறவிகளும் 'பொங்கு தமிழ்' நிகழ்வில்!

நேற்றைய 'பொங்கு தமிழ்' நிகழ்விற்கு, தென்னிலங்கையிலிருந்து வந்த பௌத்த துறவிகளும் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை கலந்துகொண்ட பௌத்த துறவிகள், அங்கு இடம்பெற்ற அனைத்து நிகழ்வுகளையும் மிக்க ஆர்வத்துடன் பார்வையிட்டதைக் காணமுடிந்தது.

# இயல்பு வாழ்க்கைக்கு அச்சுறுத்தலான பாதுகாப்பு வலயங்கள் இங்கு வேண்டாம்!

## அரசுக்கும், சர்வதேசத்துக்கும் பேணாட் அடிகள் கோரிக்கை



புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் முக்கிய இலக்கான இயல்பு வாழ்வு, தமிழ்ப் பகுதிகளில் ஏற்படுவதற்குப் பெரும் தடைக்கல்லாகவும், அச்சுறுத்தலாகவும் - தமிழ்த் தாயகம் மீது அமைக்கப்பட்டிருக்கின்ற இராணுவப் பாதுகாப்பு வலயங்களை உடனடியாக அகற்றிவிடுங்கள். சிதைக்கப்பட்ட தமிழ்மண்ணை, மீளக்கட்டியெழுப்புவதற்கு - நிதியைத் திரட்டி, திட்டங்கள் தீட்டி, அவற்றை நிறைவேற்றும் அதிகாரம் கொண்ட இடைக்கால அரசை தாமதமின்றி ஏற்படுத்துங்கள். தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் என, தமிழ்மக்கள் வெளிப்படுத்தியிருப்பதால் - இடைக்கால அரசை அவர்களிடம் கொடுத்துவிடுங்கள்.

இவ்வாறு நீதி, சமாதான ஆணைக்குழுவின் தலைவர் வண. பிதா பேணாட் அடிகளார் அரசாங்கத்தையும், சர்வதேசத்தையும் கேட்டுக்கொண்டார்.

நேற்றைய 'பொங்கு தமிழ்' நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது -

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமற்றது என்று உணர்ந்துதான் - 'சமாதானத்திற்கான போர்' என்ற அர்த்தமற்ற கொள்கை கைவிடப்பட்டு, பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது.

அப்படியென்றால், இராணுவ பாதுகாப்பு வலயத்தை நீக்கவேண்டியதுதானே? ஏன் இன்னமும் - அகதிகளினதும், மீனவர்களினதும், ஏனைய மக்களினதும் அவலங்கள் நீடிக்கவேண்டும்?

இவையெல்லாம் பாதுகாப்புக்காக என்று ஒரு நியாயம் முன்வைக்கப்படுகின்றது. அப்படியானால், யாருக்குப் பாதுகாப்பு வழங்கப்படுகின்றது.? மக்களுக்காக என்றுகூறினால் - 65 ஆயிரம் மக்களை எப்படி இராணுவம் இதுவரை கொன்றது? என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.


## கண்ணீர் அஞ்சலி

எமது மருத்துவபீட சக மாணவி

மகேஸ்வரன் ஜனனி

அவர்களின் அன்புத் தந்தையார்

**இராசரத்தினம் மகேஸ்வரன்**

அவர்கள் 27-06-2003 நேற்று காலமான செய்தி கேட்டு வேதனை அடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*21 ஆம் அணி மருத்துவ பீட*
*மாணவர்கள்,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

(399)


# உறுதியான தீர்வே வேண்டும்; மக்களின் எதிர்பார்ப்பு அதுவே!

## யாழ்.பல்கலைகழக வணிகத்துறை தலைவர் தேவராஜா

(யாழ்ப்பாணம்)

'புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி, மக்கள் மத்தியில், நம்பிக்கையை ஏற்படுத்தவேண்டும்.' இவ்வாறு, யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் தேவராஜா தெரிவித்தார்.

நேற்றைய 'பொங்கு தமிழ்' நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனது உரையில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

உலகிலுள்ள எந்தப் பல்கலைக் கழகத்திலும் - தாம் சார்ந்திருக்கின்ற பிரதேசம், இனம், பேசுகின்ற மொழி ஆகியன தொடர்பாக பாதிப் புக்கள் ஏற்படுகின்றபோது, அது பற்றிச் சிந்திக்கின்றபோதுதான் - சமூகம் விழிப்படைகின்றது.

யாழ். பல்கலைக்கழகத்தில்- சிந்தனைக்கும், நடைமுறைப்படுத்தலுக்கும் பக்கபலமாக தமிழ்ச் சமூகமும், பொதுமக்களும் செயற்பட்டுள்ளனர். யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தமது தாயகம் பறிபோகின்ற நிலையை - சுயநிர்ணய உரிமையுடனும், பாதுகாப்புடனும் வாழ முடியாத சூழ்நிலையை, கடந்த காலங்களில் பலவடிவங்களில் வெளிக்காட்டி வந்துள்ளனர். அந்த வகையில்- உன்னதமானதும், உணர்ச்சிகரமானதுமாக, சரியான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்வே இந்தப் 'பொங்கு தமிழ்' நிகழ்வாகும்.

'பொங்கு தமிழ்' 2001 ஆம் ஆண்டு நடைபெற்றபோது - முன்வைக்கப்பட்ட யுத்தத்தை நிறுத்தி, சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவேண்டும் என்ற கோஷத்தின் அறுவடையினை இன்று நாம் கண்டுகொண்டிருக்கிறோம்.

'பொங்கு தமிழ்' - 2003 நிகழ்வானதும் முக்கிய விடயங்களை வலியுறுத்துகின்றது.

திட்டமிட்ட இன அழிப்பினால்- அகதி முகாம்களிலும், இடிந்த கட்டடங்களிலும் வாழ்கின்ற எமது மக்கள் - தமது சொந்த இடத்தில் குடியேறி, அடிப்படை வசதிகளுடன் சுதந்திரமாக நடமாடக்கூடிய வகையில் , அவர்களின் பிராந்திய வாழ்விடங்களுக்கு செல்ல வகைசெய்வதாக, புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி இராணுவம் வெளியேறி, இருப்பிடங்களை உரியவர்களிடம் ஒப்படைக் வழிசெய்தல் வேண்டும்.

ஓர் இனம், தனக்கெனவுள்ள மரபு நீதியான அடையாளங்களைப் பாதுகாக்க வேண்டும். இத்தகைய தேவைகளை நிறைவு செய்ய, வட-கிழக்குப் பிரதேசங்களை உள்ளடக்கிய ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தேவை. இத்தகைய நிர்வாகக் கட்டமைப்பு, மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்படுவதே யதார்த்தமாகும்.

- என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அகதி வாழ்வு நீங்கும்போதே அமைதி வாழ்வு சாத்தியமாகும்!

## யாழ்.பல்கலை துணைவேந்தர் மோகனதாஸ்

# ஈ.பி.டி.பி. ஆதரவாளர் ஒருவர் அக்கரைப்பற்றில் சுட்டுக்கொலை

(கல்முனை)

மட்டக்களப்பு - அக்கரைப்பற்றுப் பகுதியில் ஈ.பி.டி.பி. கட்சியின் ஆதரவாளர் ஒருவர், இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்று நண்பகல் 11.00 மணியளவில் அக்கரைப்பற்று இராமகிருஷ்ணன் வீதியில் நடைபெற்ற இச்சம்பவத்தில் - நடேசன் சுதர்சன் (வயது 26) என்பவரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்தவராவார்.

இராமகிருஷ்ணன் வீதியிலுள்ள கடை ஒன்றுக்குச் சைக்கிளில் சென்றுகொண்டிந்த இவர்மீது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இவர் கொல்லப்பட்டார்.

இறந்தவரது சடலம் அக்கரைப்பற்று வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு, விசாரணைகளின்பின் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (07)

# 'பொங்கு தமிழ்' மைதானத்தில் தாழ்வாகப் பறந்த ஹெலி!

(யாழ்ப்பாணம்)

நேற்றைய 'பொங்கு தமிழ' எழுச்சி நிகழ்வை நேரில் பார்வையிட, யாழ். இராணுவ அதிகாரிகள் அதிக ஆர்வம் கொண்டிருந்தனர்.

இதன் காரணமாக சில இராணுவ உயர் அதிகாரிகளை ஏற்றிய உலங்கு வானூர்தி ஒன்று, நேற்று மருத்துவ பீட மைதானத்தின் மேலாகத் தாழப் பறந்து சென்றது. இதன்போது மைதானத்தில் கூடியிருந்த மக்கள் - தமது கைகளை உயர்த்தியும், அசைத்தும் எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து, குறிப்பிட்ட உலங்கு வானூர்தி அங்கிருந்து விலகிச்சென்று வானில் மறைந்தது.



அமைதி வாழ்வு அமைய வேண்டுமாயின், இறுதிவரை மக்கள் அனுபவித்த அகதிவாழ்வு நீங்கி, அவர்கள் சொந்த இடங்களுக்கு திரும்பவேண்டும். இதுவே, அமைதிபற்றிப் பேசுவதற்கு அடிப்படை நிலையாகும் - இவ்வாறு, தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ்.

பல்கலைக்கழகச் சமூகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற 'பொங்கு தமிழ்' நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றும்போது -

தொழில் வாய்ப்புக்களின்றி மற்றவர்களையும், நிவாரணத்தையும் நம்பி வாழ்கின்ற நிலைமை மாற வேண்டும். இடம்பெயர்ந்த மக்கள் தத்தம் சொந்த வீடுகளுக்கு திரும்பி, சொந்த மண்ணில் சொந்தத் தொழிலைச் செய்து உழைக்கவேண்டும் என நினைப்பது நியாயமானது.

சொந்த மண்ணும், தான்கொண்ட விருத்தியும் இல்லாத அநாதரவாக நிற்கும் அவலம் நிறைந்த அகதி வாழ்வை நாம் வாழ்ந்து வருகின்றோம். இந்த நிலைமைமாற - ஐக்கிய நாடுகள் போன்ற சர்வதேச அமைப்புக்கள் உதவவேண்டும்.

மக்கள் தமது சொந்த வீட்டுக்கு செல்லச் சாத்தியமான வழிமுறையாக இன்று பொங்கு தமிழை நடத்துவது பொருத்தமானது.

'பொங்கு தமிழ்' - மக்களின் இன்றைய அவலத்தை நீக்குவதற்கான, சாத்வீகமான வழிமுறையாக அமைந்துள்ளது.

பொறுமையும் - பொறுப்பும் கொண்டவர்களாக - எமது அடிப்படைத் தேவைகள், கருத்துக்களை, அபிலாஷைகளை - ஆணித்தரமாக வெளிப்படுத்துவதற்காக இந்தப் 'பொங்கு தமிழ்' அமைந்துள்ளது.

இந்தச் செய்தி - இலங்கையில் வாழ்கின்ற அனைவருக்கும் உரிய முறையில் சென்றடைவது மட்டுமின்றி, உரிய புரிந்துணர்விற்கும் வழி சமைத்து, எதிர்பார்க்கின்ற நல்ல பலனைக் கொண்டுவர, இந்தப் பிரச்சினையில் ஈடுபாடு கொண்ட அனைவரும் திடசங்கற்பம் கொள்ளவேண்டும்.

எமது வீட்டில் நாம் வாழக் கேட்பது சலுகையோ, உபகாரமோ அல்ல. இது அடிப்படை உரிமையாகும். இச்செய்தியானது - சாத்தியமான வகையில் சர்வதேச சமூகத்தால் புரிந்துகொள்ளப்படுகின்ற நிலையில், அமைதி வழியில் தமிழ் மக்களின் மேன்மையான வாழ்விற்கு உரிய வழிவகைகளை அடைதல் சாத்தியமாகும் என்றார்.

# இன்னும் இரண்டு வாரங்களுள் புலிகள் கிழக்கில் தாக்குவர்!

## சரத் அமுனுகம அரசுக்கு எச்சரிக்கை

இன்னும் இரண்டு வாரங்களுக்குள் விடுதலைப் புலிகள் - கிழக்கில் தாக்குதலைத் தொடங்குவதற்கு ஆயத்தமாகிவருவதாக, தாம் அரசாங்கத்தை எச்சரித்துள்ளதாக - பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் செய்தியாளர் சந்திப்பொன்றில் பேசும்போதே, அவர் இவ்வாறு கூறினார்.

தமது எச்சரிக்கையைக் கருத்திற்கொண்டு பிரதமர் ரணில் உடனடியாகத் தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமெனவும் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் பற்றிய தகவல்கள் தெரியவந்தபோதும், அவர்கள் தாக்குதவதற்குத் திட்டமிட்டுள்ள இலக்கு எது என்பதுபற்றி, தான் எதுவும் சொல்லப்போவதில்லை எனவும் சரத் அமுனுகம செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார்.

# வெள்ளவத்தையில் 13 தமிழ் இளைஞர்கள் நேற்றுக் கைது!

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் பொலிஸாரினால் நேற்று மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, பதின்மூன்று தமிழ் இளைஞர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இச்சுற்றிவளைப்பின் போது - நூற்றுக்கும் அதிகமானவர்களை, பொலிஸார் விசாரணைக்குள்ளாக்கியது குறிப்பிடத்தக்கது.

பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட பதின்மூன்று பேர்களில், மூவர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைக் கொண்டிருப்பவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (01)

# யுத்தமின்றியே...

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்.குடாநாட்டில் இருக்கின்ற ராணுவம் தொடர்ந்தும் இருப்பதுதான் மக்களின் விருப்பம், அதுதான் மக்களுக்குப் பாதுகாப்பு என்றெல்லாம் சர்வதேச சமூகத்திற்கு அரசாங்கம் செய்து வந்த பொய்ப்பிரசாரம் - இன்றைய எழுச்சியினால் பொய்யாக்கப் பட்டுள்ளது.

இன்றைய எழுச்சியை சர்வதேச சமூகம் சரியான முறையில் புரிந்து கொள்ளும். அதனுடாக சர்வதேச சமூகத்தின் ஆதரவு எங்களுடைய பக்கம் திரும்பும். நிச்சயமாக இந்த மக்கள் எழுச்சி வெல்லும். இதனூடாக எங்களுடைய பிரதேசத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருந்த சிறிலங்கா இராணுவம் எங்களுடைய மண்ணைவிட்டு வெகுவிரைவில் யுத்தமின்றி வெளியேறக்கூடிய சூழ்நிலை உருவாகும்.

அதேவேளை - சர்வதேச சமூகத்திற்கு இன்னொரு விடயத்தையும் கூறிவைக்க விரும்புகின்றோம். -நாங்கள் எங்களுடைய மரபுவழித்தாயகத்தில் தேசிய இனமாக சுயநிர்ணய உரிமையோடு வாழவே விரும்புகின்றோம். இவை அங்கீகரிக்கப்பட்ட ஓர் நீதியான தீர்வையே நாம் விரும்புகின்றோம். எங்களை ஆளக்கூடிய, தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடுதலைப் புலிகளே - தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக இருக்கின்றார்கள். அவர்களே தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கக்கூடிய தகுதியையும் உரிமையையும் பெற்றுள்ளார்கள். அவர்கள் எங்களுக்குப் போதும். முகாமிட்டிருக்கின்ற இராணுவம், வட - கிழக்குப் பிரதேசத்திலிருந்து வெளியேற வேண்டும். இதனை நாம் சர்வதேச சமூகத்திற்கு அழுத்திக்கூற விரும்புகின்றோம்.

எங்களுடைய வட - கிழக்குப் பிரதேசம் கடந்த 20 ஆண்டுகால யுத்தத்தில் அழிந்துபோயுள்ளது. அழிந்துபோன எமது பிரதேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும், எங்களுடைய தமிழினத்தின் கலை, கலாசார விழுமியங்களைப் பேணுவதற்கும் வளர்ப்பதற்கும் எமக்கு ஒரு நிர்வாகம் தேவை. அந்தவகையில் வட-கிழக்கில் ஒரு இடைக்கால நிர்வாகம் விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்படவேண்டும். இதனை அரசும் சர்வதேச சமூகமும் அங்கீகரிக்க வேண்டும். விரும்பியோ, விரும்பாமலோ - தமிழ் மக்களினுடைய இந்த எழுச்சி மூலம் அவர்கள் இதனை ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

அந்தவகையில் மீண்டுமொரு யுத்தமின்றியும், இரத்தம் சிந்தாமலும், உயிரிழப்புகள், உடமை இழப்புக்கள், இடப்பெயர்வுகள் இன்றியும் நாட்டில் நடந்துகொண்டிருக்கின்ற யுத்தத்திற்குத் தீர்வினைக் கண்டு, வாழ்வில் ஒரு பிரகாசமான எதிர்காலத்திற்கு நாம் அணிதிரண்டிருக்கின்றோம். நிம்மதியாக சுதந்திரமாக வாழ்கின்ற ஓர்நிலை உருவாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அதிகார பலம்...

தலைப் புலிகளிடம், அதிகார பலம் பொருந்திய இடைக்கால அரசு ஒன்று கையளிக்கப்படவேண்டும். அந்த இடைக்கால அரசை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும்.

வடக்கும், கிழக்கும் தமிழர்களின் பாரம்பரியத் தாயகம். தமிழர்களின் தாயகத்திலிருந்து சிறிலங்கா இராணுவம் வெளியேறித் தமது சொந்த ஊர்களுக்குத் திரும்ப வேண்டும். இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருக்கும், அச்சம் நிறைநத இத்தகைய சூழலில், தமிழ் மக்கள் சமாதானம் பற்றிச் சிந்திக்க முடியாது.

தமிழ்மக்கள் அச்சமற்ற சூழலில், சமாதான நடைமுறையில் செயல் முனைப்புடன் பங்குபற்றும் நிலைமை தோற்றுவிக்கப்பட வேண்டும். அத்தகைய ஓர் சூழ்நிலையில் தமிழர்களின் அபிலாஷைகளான - தனித் தேசிய இனம், மரபு வழித் தாயகம், சுயநிர்ணய உரிமை, என்பவற்றின் அடிப்படையில் பேச்சு நடத்தப்பட்டு, இனப்பிரச்சினைக்கு-நீதியானதும், கௌரவமானதுமான ஓர் தீர்வு காணப்படவேண்டும். அதனூடாகவே ஓர் நிரந்தர சமாதானம் சாத்தியம் என்பதை நாம் பிரகடனம் செய்கிறோம்.

உயர்ந்தவர்கள் நாமெல்லோரும் உலகத்தாய் வயிற்று மைந்தர், நசிந்து இனிக்கிடக்கமாட்டோம், நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம். என்றும், அப்பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# இரண்டு லட்சத்துக்கும்...

இவ்வாறு பல்கலைக்கழகத்தின் நான்கு திசைகளிலிருந்தும் வந்தடைந்த மக்கள் வெள்ளம், மருத்துவ பீட மைதானத்தில் ஒன்றாகச் சங்கமித்தது. இதனால்- மருத்துவ பீட மைதானம் முழுவதுமே சனசமுத்திரமாக மாறியது.

சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு, விழாக்கோலம் பூண்டிருந்த மைதானத்தில் மக்கள் அலை மோதிக்கொண்டிருந்தபோது-

சரியாக மாலை 4 மணியளவில் 'பொங்கு தமிழ்' எழுச்சிச்சுடர் ஏற்றப்பட்டு, தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டதுடன் - 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தேசியத் தலைவர் பிரபாகரனின் பெரியளவிலான உருவப்படத்தைப் பின்னணியாகக் கொண்ட விசேட மேடையில், 'பொங்கு தமிழ்' எழுச்சிக் கீதங்கள் இசைக்கப்பட்டன. இந்த எழுச்சிக் கீதங்கள் மைதானத்தில் திரண்டிருந்த மக்கள் மத்தியில் - பெரும் எழுச்சியையும், வேகத்தையும் ஏற்படுத்தியதைக் காணமுடிந்தது. அரங்கக் கலைஞர்களுடன் இணைந்து, திரண்டிருந்த மக்கள் வெள்ளமும் தமது கரங்களை உயர்த்தி 'எமது நிலம் எமக்கு வேண்டும்' எனவும் 'படையினரே வெளியேறுங்கள்' எனவும் உரத்த குரலெழுப்பியது.

தொடர்ந்து - மைதானத்தில் மாதிரியுருவாக அமைக்கப்பட்டிருந்த காவலரண்கள் சூழ்ந்த கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்த பொது மக்களின் குடியிருப்பு ஒன்றையும், மக்கள் வெள்ளம் காவலரண்களைத் தகர்த்து மீட்டெடுத்தது. அப்போது மைதானத்தில் எழுந்த உணர்வு வேகம், மின்சாரம் போல அனைவரையுமே பற்றிக்கொண்டது. பின்னர் - 'பொங்கு தமிழ்' நிகழ்வில் பங்குபற்றிய பிரமுகர்களின் சிறப்புரைகள் இடம்பெற்றன.

# சரியான வரலாற்றுக்...

உணர்ந்ததனால், சாதுரியமாக பொறியிலகப்படாது விலகிக்கொண்டோம். மீண்டும் ஒருமுறை தமிழினம், எமது தலைவரால் காப்பாற்றப்பட்டுள்ளது.

நிறைவேற்றதிகாரம் உள்ள ஜனாதிபதியுடன் நித்தமும் முரண்பட்டு, திண்டாடிக்கொண்டிருக்கும் ரணில் அரசுடன்- அடிப்படை அரசியல் தீர்வு பற்றியோ, சமஷ்டி பற்றியோ கதைத்துத் தீர்வுகாண்பது சாத்தியமற்றது. எனவேதான், இன்றைய நெருக்கடிகளிற்கு தீர்வுகாணும் வகையில் ஏற்கனவே- அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கப்பட்ட -

இன்றைய நெருக்கடிகளிற்குத் தீர்வுகாணக்கூடிய இடைக்கால நிர்வாகத்தை வழங்குமாறு கேட்டிருந்தோம்.

அதற்குப் பொருத்தமான திட்டவரைபை அவர்கள் முன்வைத்தால், அதனைப் பரிசீலித்து திருத்தங்கள் செய்து, பொருத்தப்பாடானதாக இருந்தால் ஏற்றுக்கொள்வோம் என்பதை- எமது அரசியல் ஆலோசகர் தெளிவுபடக் கூறியுள்ளார். பேச்சுக்களில் பங்கேற்போம் எனவும் அவர் விளக்கியுள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒன்றரை வருடங்களுக்கு மேலாக காலம் கடந்த நிலையிலும், மக்களின் இயல்பு வாழ்க்கையில் எந்தவித முன்னேற்றமும் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. மாறாக, மக்கள் மனங்களில் இருள்சூழ்ந்த, அச்சமும் பீதியும் நிறைந்த வாழ்வாகவே காணப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்த வரையில்- மக்கள் செறிந்து வாழ்ந்த 144.15 சதுர கிலோமீற்றர் பரப்பளவு, உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு இராணுவத்தினர் குடிகொண்டுள்ளனர். 24,178 குடும்பங்கள் இதனால் இடம்பெயர்ந்து அகதிகளாக்கப்பட்டுள்ளனர். 12,259 ஏக்கர் பயிர்செய்நிலமும், 81.5 கிலோமீற்றர் கடற்பிரதேசமும், மக்கள் தொழில் செய்யமுடியாதவாறு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. 4,436 மீனவக்குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 246 ஆலயங்கள், 16 பாடசாலைகள், 40 பாரிய தொழில் நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் என்பன இன்னமும் இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில், மக்கள் வாழ்விற்கு மறுக்கப்பட்ட பிரதேசங்களாக உள்ளன. இவைதவிர உயர்பாதுகாப்புப் பிரதேசத்திற்கு வெளியே மக்களின் விருப்பத்திற்கு மாறாக- 1215 வீடுகளை இராணுவம் பயன்படுத்தி வருகின்றது. இது போன்று கடற்தொழிலாளர் பயன்படுத்திவந்த 45 கடற்தொழில் துறைமுகங்களில்- 21 அனுமதிக்கப்பட்டும், 24 துறைமுகங்கள் அனுமதிக்கப்படாமலும் இருக்கின்றன. அத்துடன்- படைத்தரப்பின் கெடுபிடிகளும், அச்சுறுத்தல்களும் "வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவது போல" மேலும் எம்மக்களின் மனங்களைப் பாதிப்படையச் செய்கின்றன.

இப்படியான சூழ்நிலையில்தான் இயல்புவாழ்க்கை மறுக்கப்பட்டு, யுத்தமேகம் எம்மேல் திணிக்கப்பட்டிருக்கின்ற நிலையில், யாழ்.குடாநாட்டின் மூலைமுடுக்குகளிருந்தெல்லாம் பொங்குதமிழராய் கிளர்ந்தெழுந்து, இன்று பொங்கி வழிகின்ற பொங்கு தமிழ் கருக்கொண்டு - உருவெடுத்துள்ளது. இது இலங்கை அரசிற்கும், உலகிற்கும் ஒரு செய்தியை சொல்கிறது.

"இனியும் எம்மால் இழுபடமுடியாது, எங்கள் வீடுகளுக்கு நாங்கள் போகவேண்டும். இராணுவத்தினரே! உங்கள் வீடுகளிற்கு நீங்கள் போங்கள்" என்பதே அச்செய்தி.

இது, எம்மாவீரரின் ஈகங்களையும், கனவுகளையும் மெய்ப்பித்துள்ளது. எமது போராட்டத்திற்கு புதிய வேகத்தையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தும் தலைமைக்கு வரும் சவால்கள் எதுவானாலும், முகங்கொடுத்து முறியடிப்பதற்கான வலுவை வலுவூட்டிநிற்கும்.

மக்கள் விழிப்பும், எழுச்சியும் எமது விடுதலைப் போராட்டத்தை வென்றெடுக்கும். எமது பாரம்பரிய மண்ணில் எமது தேசியத்துடன் ஐ.நா.சாசனத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ள எமது தலைவிதியை நாமே தீர்மானிப்போம். அரசியல் சுதந்திரத்தை வேண்டிநிற்கின்றோம். அதனை நாமே நிர்ணயிப்போம்.

ஒன்றிணைந்து குரல்கொடுப்போம். ஒரு தலைமையின்கீழ் உறுதியாய் நிற்போம்.

- என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க,லி,ரா,அ,ச)